# இலங்கையின் இன உறவுகள்
## சமூக வரலாற்று சூழமைவு



பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இன உறவுகள்

## சமூக வரலாற்று சூழமைவு

லக்ஷிரி பெர்னான்டோ

தமிழாக்கம்: வைரமுத்து சுந்தரேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | V |
| நன்றி உரை | VII |
| அறிமுகம் | IX |
| 1. நான் ஒருவரை ஒருவர் எவ்வாறு புரிந்து கொள்கிறோம் | 1 |
| 2. இனத்துவ அடையாளம் என்பது என்ன? | 5 |
| 3. இனக் குழுக்களின் தோற்றமும் பண்பும் | 11 |
| 4. இன முரண்பாட்டின் மூலங்கள் | 18 |
| 5. இன மீளிணக்கப்பாட்டுக்கும் சமாதானத்திற்குமான சாத்தியப்பாடுகள் | 30 |
| 6. முடிவுரை | 35 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கைப் பிரஜைகளான இரு தரப்பினர்க்கிடையில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. பத்து வருடங்களுக்கு மேலாக நாங்கள் சமாதானத்தைப் பற்றி பேசி வருகிறோம். அண்மையில் பல உயர்தர மட்டத்தில் முரண்பாடுகளை எப்படித் தீர்ப்பது என்றும், முரண்பாடுகளை அகற்றுவது எப்படி என்றும், பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அறிவும் திறமையும் படைத்த அரசாங்க உத்தியோகத்தினரும், மற்றவர்களும் சமாதானத்தைப் பற்றிப் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். பலர் இது பற்றிச் சாதகமாக எழுதியிருக்கும் அதே சமயம் பலர் அது பற்றி எதிர்ப்புக் கருத்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினராகிய நாம் இத்தகைய பேச்சுக்கள் ஒரு தவறான பாதையில் செல்வதாக உணருகின்றோம். பெரும்பாலும் தவறான அர்த்தப்பாடுகளும், தவறான விளக்கங்களும், தவறான சொற்பிரயோகங்களும், கருத்துப் பிரயோகங்களும், திட்டமிடப்பட்ட கருத்து மாற்றங்களும், உதாரணங்களும், அனுபவங்களும், மக்களைத் திசை திருப்புவதற்கும், மக்கள் மத்தியில் மனப்பீதியை ஏற்படுத்தும் நோக்கிலுமே எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இப் பிழையான நிலைப்பாட்டின் அடிப்படையில் மக்கள் தங்கள் தங்கள் சுய அடையாள உருவாக்கத்தில் ஐயம் ஏற்பட்டு குழம்பிப் போய் உள்ளனர். இதனால் எம் நாட்டு மக்களுக்கு இவை பற்றி தெளிவுபடுத்துவது ஒரு நீண்ட காலத் தேவையாக இருக்கிறது. இந் நோக்குடன் நாங்கள் சில விடயங்கள், கருத்துக்கள், முரண்பாடுகளைத் தெரிவு செய்து இவற்றைச் சரியான முறையில் எப்படி விளக்க வேண்டுமோ அதன்படி விளக்கம் கொடுக்க முனைகின்றோம். சில புதிய விளக்கங்களும் தேவைப்படுகின்றன. தீவிர கட்சி அரசியல் சார்பற்ற சிலரையும் தேர்ந்தெடுத்துள்ளோம். தொடர்ந்தும் மனித விழுமியங்களில் நம்பிக்கை உடையோரையும், ஜனநாயகப் பண்பாட்டில் அவாவுள்ளவர்களையும், இலங்கையின் சமய சார்பற்ற பன்முகத் தன்மையை பேணுபவர்களையும் இதற்காகத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

இம்மீள் கட்டமைப்பில் நாம் ஒரு சமூக நீதியைப் பேணும் ஜனநாயகப் பண்பாட்டை எதிர்பார்க்கின்றோம். இப்பண்பாடு சகல இன மக்களினதும் தனி மனித உரிமைகளையும், சமூக உரிமைகளையும், சுதந்திர மனப்பாங்கையும் பேணும் ஒரு நிலமையை ஏற்படுத்தும் என்பதும் நமது எதிர்பார்ப்பு.

இளையோர் முதியோர் என ஏழாயிரம் பேருக்கு இச்சிறு நூல் சென்றடையும்.

## கனவுகள் நிஜமாவதுண்டு
## எதிர்பார்ப்புகள் பல

**செல்வி திருச்சந்திரன்**
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உரை

இத் திட்டம் பலரினதும் முயற்சியால் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதில் கோட்பாட்டு நிபுணத்துவம் பெற்றோரும், செயலூக்க வல்லுனரும் கலந்து கொண்டனர். முதலில் இச்சிறு நூல்களிற்குத் தலைப்புக்களைத் தெரிந்தெடுப்பதற்கு மேற் குறிப்பிட்டோரும், எமது நிறுவன அங்கத்தினரும் சேர்ந்து ஒரு சிறு குழுவை உருவாக்கினோம்.

திருமதி பேணடீன் சில்வா, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து திரு. ஏ. ஜே. கனகரட்ண ஆகியோருடன் கலந்துரையாடித் தலைப்புக்களைத் தெரிவு செய்து பத்து ஆய்வாளர்களையும் இனங்கண்டு கொண்டோம். ஆனால் எங்களால் இந்த இலக்கை அடைய முடியவில்லை. இறுதியில் ஐந்து ஆய்வாளர்கள் தான் எங்களுடன் நிலைத்து நின்றார்கள். திரு. ஜெகன் பெரேரா, கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ, கலாநிதி குமார் டேவிட், செல்வி டில்றுக்சி பொன்சேகா, திரு. அன்ரன் பெர்னாண்டோ ஆகியோருக்கு எமது நன்றிகள்.

மூலப்பிரதிகள் ஆங்கிலத்தில் இருந்தமையால் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. சோமா ஜெயக்கொடி, இந்திராணி கோவிந்தசாமி, திரு. ஏ. ஜே. கனகரட்ண, திரு. கே. நடேசன், திரு. வைரமுத்து சுந்தரேசன் ஆகியோர் மொழி பெயர்ப்பதற்கு உதவியாக இருந்தனர். இவர்களுக்கும் எமது நன்றிகள். இந்நூல் அச்சிட்டு வெளியிடுவதற்கு உதவியவர்கள் 'யுனி ஆர்ட்ஸ்' நிறுவனத்தினராவர். இவர்களின் பொறுமையும் கடமையுணர்வும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக இத்திட்டம் வெற்றி பெறக்காரணமாக உதவிய பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன அங்கத்தவர்களையும், மரினி டி லிவேரா, மகேஸ் வைரமுத்து, அட்டைப்படம் வரைந்து உதவிய சாந்தினி குணவர்த்தன அவர்கட்கும், மேலும் எமது உதவியாளர் சந்திரசேனவுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**செல்வி திருச்சந்திரன்**
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

இலங்கையில் நிலவும் இனத்துவ உறவுகளை சமூக, வரலாற்று சூழலில் எளிய மொழி நடையில் அலசுவதே இச்சிறு நூலின் நோக்கம் ஆகும். இச்சிறு நூலின் தலைப்பிலேயே இது தொடங்குகின்றது. இந் நூல் கல்வி நோக்கங்களைக் கருத்திற் கொண்டு எழுதப்பட்டுள்ளமையால் இயன்றளவு எளிய மொழி நடை பிரயோகிக்கப்பட்டுள்ளது. எனினும் ஆராயப்படும் விடயம் எளிமையானது அல்ல. எனவே உள்ளடக்கப்பட்ட விடயங்களை மீள் வாசித்தல் அல்லது ஆறுதலாக வாசித்தல் சிறந்த பலன்தரும் என்பது இங்கு அறிவுறுத்தப்படுகிறது.

நாம் யார் என்பது பற்றியும் நாம் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதில் ஏன் தடைகள் உள்ளன என்பது பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு இனத்துவ உறவுகள் தொடர்பான சமூக சூழமைவு அவசியமாகிறது. இனத்துவ உறவுகளைப் புரிந்துகொள்வதற்கு வரலாற்றுச் சூழமைவும் அவசியமாகும். ஏனெனில் இச்சூழமைவிலேதான் எமது பெரும்பாலான தப்பபிப்பிராயங்கள், தப்பெண்ணங்கள், அச்சுவார்பான படிமங்கள் என்பன உறைந்துள்ளன. ஆனால் மிக முக்கிய அம்சமாக இங்கு அமைவது வரலாற்றுச் சூழமைவில் இனத்துவம், தேசம், பல்கலாசாரம் ஆகிய எண்ணக்கருக்களைப் புரிந்துகொள்வதாகும்.

எந்தவொரு இனக்குழுவிற்கும் பக்கச்சார்பின்றி, நாட்டில் இன முரண்பாடு பற்றிய நடுநிலையானதும் புறநிலையானதுமான ஒரு விளக்கத்தை தருவதற்கு இச்சிறு நூல் முனைகிறது. எனினும் இனக்குழுக்களுக்கு இடையில் கடந்த காலத்திலும் தற்காலத்திலும் நிலவிவந்த நல்லுறவுகளைச் சீர்குலைத்த கொள்கைகள், நடைமுறைகள் பற்றி விமர்சிப்பதற்கு நூலாசிரியர் தயங்கவில்லை. சமாதான அமைதி நிகழ்வுத் தொடர் குறித்து நேரான மனப்பாங்குடன் நூல் முற்றுப்பெறுகிறது.

நூலினதும் அதன் உள் அடக்கங்களினதும் நோக்கமாக அமைவது இன ஐக்கியத்தை மீளமைத்து சமாதானத்தை நாட்டில் முன்னெடுப்பதாகும். சமாதானத்தை முன்னெடுப்பதற்கு சமாதானம் பற்றிய அதிக அளவிலான விளக்க நூல்கள் அவசியம் என்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்டதொன்று. சமாதானம் பற்றிய வாசிப்பு ஏடுகளின் பற்றாக்குறை சமாதான இயக்கத்தின் ஒரு பிரதான குறைபாடாக இந்நாட்டில் அமைகிறது. ஆகவே இந்நூல் இவ்விடைவெளியை சிற்றளவில் நிவர்த்தி செய்ய முனைகிறது.

சாதாரண மக்கள் வாசிப்பதற்கு அல்லது பயிற்சிக் காலங்களில் கல்வி ஏடாக அவர்களால் பயன்படுத்தப்படுவதற்காக இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நோக்கங்களுக்காக நூலானது சிங்களத்திலும் தமிழிலும் மேலும் விளக்கத்துடன் மொழிப்பெயர்க்கப்படவேண்டியது அவசியமாகிறது.

ஆயினும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள இந்த முதற்பதிப்பு இனத்துவ உறவுகள், தொடர்பாடல் ஆகிய விடயங்களில் ஆங்கிலத்தை தொடர்பாடல் மொழியாகப் பயன்படுத்த முயற்சிக்கும் படித்த இளைஞர்களுக்கு பிரயோசனம் மிக்கதாக விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.

# நாம் ஒருவரை ஒருவர் எவ்வாறு புரிந்து கொள்கிறோம்?

நாம் பிறரையும் எம்மையும் எவ்விதம் புரிந்து கொள்கின்றோம் என்பது மனித வரலாற்றில் எப்போதும் ஒரு பிரச்சினையாகவே அமைகிறது. இப் பிரச்சினை இலங்கைக்கு மட்டும் உரியதொன்றாக அல்லாமல் அனைத்துப் பிற நாடுகளுக்கும் பொருந்தும். இது ஒரு புதிய பிரச்சினை அல்ல. மனித வரலாற்றில் நீண்ட காலமாக இது காணப்படுகின்றது.

நீங்கள் ஒரு சிங்களவராக இருப்பின் தமிழர்கள் உங்களிலும் முற்றாக வேறுபட்டவர்கள் என சிந்திக்கக் கூடும். நீங்கள் ஒரு தமிழராயின் சிங்களவர்கள் உங்களிலும் முற்றாக வேறுபட்டவர்கள் என நீங்களும் சிந்திப்பீர்கள். நீங்கள் ஒரு முஸ்லிம் எனின் சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகத்தினரும் உங்களிலிருந்து முற்றாக வேறுபட்டவர்கள் என நீங்கள் கருதுவீர்கள்.

## புரிந்து கொள்வதில் ஏற்படும் சிரமங்கள்

'அடையாளப் பிரச்சனை' என சமூக விஞ்ஞானிகளால் அழைக்கப்படும் இப் பிரச்சினையைப் புரிந்து கொள்வதில் சிரமங்கள் காணப்படல் வெளிப்படை. இச் சிரமம் பல காரணங்களால் ஏற்படுகிறது. நாம் வழமையாக, ஒரு பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்குப் பதிலாக அதைத் தவறாகப் புரிந்து கொள்கிறோம். இதற்கான பிரதானதொரு காரணம் மட்டுப்படுத்தப்பட்ட எமது அறிவு. மற்றோர் முக்கிய காரணம் தப்பெண்ணமாகும். ஆகவே எமது அறிவை விசாலமாக்கி, தப்பெண்ணங்களை விலக்கிக் கொள்வோமாயின் பிறர் பற்றியும் எம்மைப் பற்றியும் சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும். இந் நூலேட்டின் நோக்கம் இதுவேயாகும்.

பிறருக்கும் எமக்கும் இடையில் வழமையாக நாம் காணும் வேறுபாடு இனத்துவ உறவுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதொன்று அல்ல. இவ் வேறுபாடு குடும்ப வாழ்க்கை முதல் அரசியல் ஈறாகவும் சமூகத் தொடர்புகள் தொட்டு சர்வதேச தொடர்புகள் வரையாகவும் அனைத்து சமூகத் தொடர்புகளிலும் காணப்படுகிறது.

நீங்கள் குறிப்பிட்ட மதத்தவராயின் பிற மதத்தவரைத் தப்பெண்ணத்துடன் நோக்க முற்படுகிறீர்கள். நீங்கள் ஒரு குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவரெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ் சாதியினர் எனக் கருதப்படுவோரை வெறுப்புடன் நோக்குகிறீர்கள். அரசியற் கட்சி ஒன்றின் தீவிர ஆதரவாளராக நீங்கள் இருப்பின் இந் நிலைமை மேலும் சீர்கெடும். பிறர் சுலபமாக உங்களுக்கு பகைவராவார். பகைவன், பகைவன், என்றும் பகைவன். நண்பர்களை உருவாக்குவதை விடுத்து வழமையில் எம்மால் உருவாக்கப்படுவது இதுவே.

இப்பிரச்சனை பல சமூக உறவுகளில் ஒரு தொற்றாகக் காணப்படுகிறது. எனினும் இங்கு அலசப்படும் விடயம் இனத்துவ உறவுகளுடன் மட்டுப்படுத்தப்படுகிறது. ஏனெனில் அங்குதான் பெரும்பாலான எமது தவறான புரிந்துணர்வுகளும் தப்பெண்ணங்களும் காணப்படுகின்றன. எனினும் தெளிவு, விளக்கம் என்பன காரணமாக பிற பகுதிகளிலிருந்தும் நாம் சில உதாரணங்களைக் கருத்திற் கொள்வோம்.

**வெளியார்**

எமது குடும்பங்களுக்கு உள்ளேயே விவாகவழி உறவினர்களை நாம் நேரடியாகவோ மறை முகமாகவோ எவ்விதம் பாரபட்சமாக நடத்துகின்றோம் என்பது பற்றி அவதானித்துள்ளீர்களா?

K. N. ஜயதிலகவின் 'புஞ்சிறால' இதற்கான சிறந்த விளக்கங்களில் ஒன்று.

இன்று இது ஒரு பிரசித்திப்பெற்ற தொலைக்காட்சி நாடகம். தனது மகன் சுயவிருப்பில் ஒரு பெண்ணைத் திருமணம் புரிந்ததையிட்டு புஞ்சிறால விசனம் அடைகிறான். அவர்கள் அவனுடன் ஒருமித்து வாழ வரும் பொழுது அவன் அவள் மீது பாரபட்சம் காட்டுகிறான். புஞ்சிறாலவுக்கு மருமகள் வெளியார் ஆகப்படுகின்றாள். அவளைப் பொறுத்தவரை 'வெளியார்' என்ற வகை பாரபட்சத்திற்கான சிறந்த காரணமாகிறது.

**அவசியமான வேறுபாடுகள்**

வாழ்க்கையில் சில நடைமுறைக் காரணங்களுக்காக, பிறருக்கும் எமக்கும் இடையில் ஏதோ ஒரு வகையான வேறுபாடு அவசியம் ஆகிறது. அவ்வாறில்லையென்றால் நாம் செயற்படுவது சாத்தியமற்றதாகும். உதாரணமாக, நாம் யாரையாவது அந்நியர்களைச் சந்திக்கும் போது அவர்களை அந்நியன்களாக இனங் காண்கின்றோம். 'அந்நியர்' என்ற வகைப்பாடு ஒரு வேறுபாடு ஆகிறது. அவர்களால் சிங்களத்தையோ தமிழையோ பெரும்பாலும் விளங்கிக் கொள்ள முடியாது என்பதையும் இவர்கள் வருகையாளர் என்பதையும் இன்னோரன்ன தகவல்களையும் நாம் உடனடியாக அறிந்து கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவ் வேறுபாடு தப்பெண்ணத்தையோ அல்லது வேறெந்த எதிர்மறையான தீர்ப்பையோ கட்டாயமாக கொண்டிருக்க வேண்டியதில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்திலேதான் அந்நியர்கள் அல்லது எமது சொந்த சமூகத்திலேயே 'பிறர்' என எம்மால் அழைக்கப்படுபவர்கள் தொடர்பான வேறுபாடுகள் பற்றிய பிரச்சினைகள் தோன்றுகின்றன.

அடையாளம் வேறுபாடுகள் தொடர்பான பிரச்சினைகள் எதிரெதிர் துருவப்படுத்தல் மூலம் ஏற்படுவன எனப் பெரும்பாலான சமூக விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். எனினும் அடையாளத்திலோ வேறுபாடுகளிலோ எதுவித தப்பும் இல்லை. வேறு வார்த்தைகளிற் கூறின் பிறருக்கும் எமக்கும் இடையிலான வேறுபாட்டை முரண் கருத்தின் அடிப்படையிலேயே நாம் உணர முற்படுகிறோம். நாம் ஒருவரை யொருவர் புறம்பான தளங்களிலிருந்து புரிந்து கொள்கிறோம். எமக்கிடையே சீனச் சுவர் ஒன்றிருப்பதாக நாம் நம்புகின்றோம். இவ் எதிரெதிர் துரவப்படுத்தல் நிலை குறிப்பிட்டதொரு வரலாற்று அல்லது சமூக சூழமையில் அல்லது இரண்டினதும் அடிப்படையிலான ஒரு விளைவாக அமையலாம். எங்ஙனமாயினும் எதிரெதிர்த் துரவ அடையாள உறவுகள் தீங்கானவை.

இவ்வெதிரெதிர் துரவ நிலைப்பாடின் பின்னணியில் மனித தவறு இருப்பதை அவதானிக்க முடியும். அடையாள உறவுகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தப்பெண்ணங்களுக்கு மூலமாக விளங்குவது இம்மனிதப் பலவீனமே. 'பிறருக்கும்', 'எமக்கும்' இடையிலான தொடர்புகளை 'நாம்', 'அவர்கள்' என்ற அடிப்படையில் புரிந்துகொள்ள நாம் முற்படுவதாலேயே இத் தவறு சம்பவிக்கிறது.

'பிறருக்கும்' 'எமக்கும்' என நாம் கூறும்போது, தாரள மனப்பாங்குடன் எம்மைக் காட்டினும் பிறருக்கு முதன்மை கொடுக்கின்றோம். தாராள மனப்பாங்கு வெளிப்படையாக ஒரு சிறந்த மனிதப் பண்பு. ஆயினும் 'நாமும்' 'அவர்களும்' என நாம் குறிப்பிடும்போது சுயமைய உணர்வுடனும் பகை உணர்வுடனும் பிறரைக் காட்டினும் எமக்கு முதன்மை தருகின்றோம்.

'நாம்' என்பது 'நான்' என்பதன் நீட்சி என்பது வெளிப்படை. இது சுயத்தினதும் தன் முனைப்பினதும் சுயநலத்தினதும் நீட்சியாகும். எனவே 'நாமும்' 'அவர்களும்' என்பது முரண் எதிரெதிர் துரவ ரீதியான பகைமைசார் கருத்து ஆகிறது. அதுவே தவறான புரிந்துணர்வு, தப்பெண்ணம், முரண்பாடு என்பனவற்றிக்கு இட்டுச்செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல்பானது என்ன?

எமது தொடர்புகளை ஏன் 'நாம்', 'அவர்கள்' என்ற அடிப்படையில் விளங்கிக் கொள்கின்றோம்? இது ஓர் இயல்பான மனப்பாங்கு என சிலர் நம்புகின்றார்கள். ஆனால் அது முற்றாகச் சரியானது அல்ல. அநேகர் தமது தொடர்புகளை இன்று அத்தகைய முரண் கருத்தியற் பாங்கில் விளங்கிக்கொள்கின்றனர் என்பது உண்மை. ஏனெனில் எமது சமூகம் எதிரெதிர்த் துரவ பண்பு வாய்ந்ததொன்று. ஆயினும் இதை இயல்பானதெனக் கருதிவிட முடியாது. ஒரு வேளை இயல்பான மனப்பாங்கு என்பது இதன் எதிர்க்கிடையாக இருக்கலாம்.

'எமக்கும் அவர்களுக்கும்' இடையிலான வேறுபாடு இயல்பானது என்ற வாதத்தை மறுதலிக்கும் தெளிவான உதாரணம் ஒன்று சமீபத்தில் எமக்கு கிடைத்தது. சுனாமி அனர்த்தம் இனத்துவம் அல்லது பிற வேறுபாடுகளின்றி அனைவரையும் சமமாக நடத்தியது மட்டுமன்றி, மக்கள் இனத்துவ அல்லது மத வேறுபாடின்றி அனர்த்தத்திற்கு முகங் கொடுத்தனர். மனித சுபாவத்தின் இயல்பான தன்மை இதுவே. அனர்த்தம் அல்லது விபத்திற்கு முகங்கொடுக்கும்போது மிக அதிக பட்சம் இயல்பான முறையில் மனிதர் நடந்து கொள்கின்றார்கள் என நடத்தைவாத விஞ்ஞானிகள் எப்போதும் நம்புகின்றனர். அது நிருபிக்கப்பட்டுள்ளதும் ஆகும்.

எம்மில் பிரிவினையை ஏற்படுத்துவது சமூக வளர்ப்பு முறையன்றி மனித இயல்பு அல்ல. சமூக வளர்ப்பு முறை என்பது நாம் சமூகத்தில் எவ்விதம் வளர்க்கப்படுகிறோம் என்பது மட்டும்தான் அர்த்தம் அன்று. உண்மையானவை என நாம் நம்ப வைக்கப்படும் விடயங்களையும் இது குறிக்கும். 'பிறர்' எம்மிடமிருந்து முற்றாக வேறுபட்டவர்கள் எனவும் 'எமக்கும்' 'அவர்களுக்கும்' இடையில் கூட்டுறவோ ஒற்றுமையோ இருக்க முடியாது எனவும் நம்புமாறு நாம் தூண்டப்படுகிறோம்.

எமது கருத்துப் பரிமாறலின் ஆரம்பத்தில் நாம் வாதிட்டதுபோல, குறிப்பாக இனத்துவ உறவுகளில் நாம் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதில் உள்ள பிரதான சிரமங்கள் எமது மட்டுப்படுத்தப்பட்ட அறிவு, தப்பெண்ணங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டவை. ஆகவே இவ்விடயம் தொடர்பான சரியான புரிந்துணர்வுக்கான மார்க்கம் பின்வரும் இரு வழிவகைகள் மூலம் அடைந்து கொள்ள முடியும்.

- இனத்துவம் சம்பந்தப்பட்ட அறிவை மேம்படுத்தல்.
- பிறர்பற்றிய தப்பெண்ணங்கள், ஒரு முகச்சார்புகளையும் அகற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2.

## இனத்துவ அடையாளம் என்பது என்ன?

இனத்துவம், இனத்துவ அடையாளம் என்பன எமது சமூகத்திற் புதிய சொற்களும் புதிய பதங்களும் ஆகும். எனினும் புராதன கிரேக்க நாட்டில், 'எத்றோஸ்' என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. கிரேக்க நாட்டிற்குப் பிற நாடுகளிலிருந்து வருகை தந்த மக்களை அடையாளங் காண இப்பதம் பயன்படுத்தப்பட்டது.

இன்று இனத்துவம் என்ற பதம் அனைத்து நாடுகளிலும் அங்கு வாழும் சமூக கலாசாரக் குழுவினரை இனங்காண்பதற்கு பிரபல்யமாகப் பயன்படுத்தப்படுகிறது. சமூக விஞ்ஞானிகள் அனைத்து சமூகங்களிலும் காணப்படும் இக் குழுவினரை அடையாளங் காண்பதற்குப் பயன்படுத்துகின்றனர். இன்று உலகில் 6000 இற்கும் மேற்பட்ட இனக் குழுக்கள் அல்லது சமூக கலாசாரக் குழுக்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இவ்வனைத்து சமூக கலாசாரக் குழுவினரும் உலகிற் பல நூற்றாண்டுகளாகக் காணப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த காலங்களில் இக் குழுவினர் முறையாகக் கணிக்கப்பட்டோ அடையாளங் காணப்பட்டோ இருக்கவில்லை. அடையாலம் காணலும் கணிப்பிடலும் நவீன காலத்திற்குரியன. இருப்பினும் சில நாடுகளிற் கடந்த காலங்களிலும் கூட குறிப்பிட்ட காலகட்டங்களில் இனக்குழுக்கள் கணிப்பிடப்பட்டிருந்தன. எகிப்திலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் குடித்தொகை மதிப்பீடு தொடர்பான ஆவணங்கள் காணப்படுகின்றன.

### இனவேறுபாடு

இன்று பெரும்பான்மையான நாடுகள் பல்கலாசார சமூகங்களாகக் காணப்படுகின்றன. ஜப்பான், கொரியா, சுவீடன், டென்மார்க், நோர்வே போன்ற சில நாடுகள் மட்டும் ஒப்பீட்டு ரீதியில் ஒரே சீரான பண்புசார் நாடுகளாகக் காணப்படுகின்றன. இந்நாடுகளிலும் கூட சிறுபான்மை இனக் குழுக்களைக் காணமுடியும்.

தென், தென் கிழக்காசிய நாடுகள் குறிப்பாகப் பல்லின சமூகங்களுக்கு பேர் பெற்றவை. இந்தியா, நேபாளம், பர்மா, இந்தோனேசியா, பிலிப்பீன்ஸ் போன்ற நாடுகளில் இன, மொழிக் குழுக்களின் எண்ணிக்கை பாரியதாகக் காணப்படுவதுடன் அவற்றைக் குடிமதிப்பீடு செய்வதுவும் கடினம். இலங்கையும் இதற்கு ஒரு விலக்கல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்தகால அடையாளங்கள்:

வருணம், சாதி என்பன தென் ஆசியாவில் முறையே சமூக பொருளாதார, சமூக கலாசாரக் குழுக்களை அடையாளங் காண்பதற்குப் பயன்படுத்தப் பட்ட இரு பிரதான பதங்கள் ஆகும். இந்தியாவில் வருணம் என்பது பிரதானமாகச் சாதி அமைப்பைக் குறித்து நின்றது. இது அடிப்படையில் ஒரு சமூகப் பொருளாதார வகைப்பாடு ஆகும். வருண அமைப்பைப் பொறுத்தவரை சமூகம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரதான சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இச்சாதிகளுக்கு இடையில் கடுங் கட்டமைப்புகளும், வரையறைகளும் காணப்பட்டன. மக்கள் பிரதானமாக சாதி அல்லது சமூக பொருளாதாரக் குழுவின் அடிப்படையில் இனங்காணப்பட்டனர்.

எனினும் சாதி என்று அழைக்கப்படும் சமூக கலாசாரக் குழுக்களும் காணப்பட்டன. இச் சாதிகள் நவீனகால கட்டங்களில் இனக்குழுக்கள் என எம்மால் அழைக்கப்படும் பிரிவினருக்கு ஒத்தவையாக விளங்கின. நேபாள தேசத்தின் ஸ்தாபகரான மன்னர் பிரித்வி நாராயண ஷா நேபாளத்தை 'நான்கு வருணங்களையும் முப்பத்தாறு சாதிகளையும் கொண்ட மலர்த்தோட்டம்' என வர்ணித்தார். இது ஓர் அழகிய வாக்கியமாக அமைவதுடன் நேர் சிந்தனை பயப்பதாயும் காணப்படுகிறது. மலர்த்தோட்டம் ஒன்றுக்கு நேபாள சமூகத்தை ஒப்பிடுவதன் மூலம் பல்வேறுபட்ட சாதிகளுக்கும் இனக் குழுக்களுக்கும் இடையில் ஒத்திசைவு காணப்பட்டதைக் குறிப்பால் உணர்த்த நேபாள மன்னர் முயன்றார். இது சரியானதா தவறானதா என்பது ஒரு சர்சைக்குரிய விடயம்.

புராதன சமூகங்களில் காணப்பட்ட முரண்பாடுகளை சாதியமைப்பு மட்டுப்படுத்தியதாக சிலர் நம்புகின்றனர். எவ்வாறிருப்பினும் சாதியமைப்பானது எக்காரணங்கொண்டும் அங்கீகரிக்கப்படக் கூடியதொன்று அல்ல. சாதியமைப்பானது தாழ்த்தப்பட்ட சாதியினர் எனக் கருதப்படுபவரை மிக ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதாகும்.

இலங்கையில் நிலவும் சாதியமைப்பு இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளிற் காணப்படும் சாதியமைப்புகளிலிருந்து வேறுபட்டது. இலங்கையில் வருணம் என அழைக்கப்படும் நான்கு வகையான பிரிவு நிலை கடுமையாகப் பின்பற்றப் படுவதில்லை. பதிலாக வேறுபட்ட தொழில்களை அடிப்படையாகக் கொண்ட பல சாதியினர் எம்மத்தியிற் காணப்பட்டனர். இச் சாதியினர் குலம் என அழைக்கப்பட்டனர். சில சாதியினர் உயர்ந்தவர்களாயும் ஏனையோர் தாழ்ந்தவர்களாயும் கருதப்பட்டனர். இவ்வமைப்பு முறை சிங்களவருக்கும் தமிழருக்கும் பொதுவான தொன்றாய்க் காணப்பட்டது. இந்தியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவது போன்று, இலங்கையிற் காணப்படும் சாதியமைப்பு இனரீதியான முரண்குழு நிலைக்கான எந்தவொரு சாத்தியக் கூறையும் தணித்து விட்டது என வாதிடப்படுகிறது.

புராதன அல்லது இடைக்கால இலங்கையில் இனரீதியான முரண் குழுநிலை இருந்ததில்லை என்பது உண்மை. இதற்குக் காரணம் சாதி அமைப்பா இல்லையா என்பது சர்ச்சைக்குரிய விடயம். எனினும் எமது புராதன சமூகத்தில் இனரீதியான கருத்து நிலைகளைக் காட்டிலும், சாதியமைப்பு தொடர்பான கருத்து நிலைகள் முனைப்புற்றிருந்தன என்பது உண்மை. உதாரணமாக கண்டி இராய்ச்சியத்திற்கு உரிமை கோர சிங்கள அரச வம்சத்திலிருந்து எவரும் காணப்படாத நிலையில் தென்னிந்தியாவிலிருந்து ஒருவர் அப்பதவிக்காக வரவழைக்கப்பட்டார். வேறு பல உதாரணங்களும் காணப்பட்டன. ஆயினும் சாதியமைப்புக்கு அப்பால் இனத்துவம் அவ்வளவு தூரம் ஏன் முக்கியத்துவம் பெறவில்லை என்பதற்கான வேறு காரணங்கள் காணப்பட்டன. எமது சமூகத்திற் காணப்பட்ட சாதியமைப்பைத் தவிர இனத்துவம் அந்தளவு முக்கியத்துவம் பெறாமைக்கு வேறு காரணங்கள் இருக்கலாம். எமது சமுதாயத்திலே இனத்துவ அடையாளம் பற்றி ஆராயும் போது இவ்விடயங்கள் தொடர்பாக மேலும் விளக்க முடியும்.

இலங்கையில் ஓர் அடையாளத்தைப் பரந்துபடக் குறிப்பதற்கான பொதுவானதொரு பதமே சாதி (Jati). இது சில சமயங்களில் சாதியையும் (caste) ஏனைய பிற சந்தர்ப்பங்களில் இனத்துவத்தை அல்லது சமூக கலாசார அடையாளத்தையும் சுட்டி நின்றது. இன்று இப்பதம் தேசம் என்ற எண்ணக் கருவையும் குறித்தது அல்லது குறிக்கிறது.

## இனத்துவமும் தேசமும்

நவீன காலத்தில் தேசம் என்ற எண்ணக்கரு முக்கியம் பெறுகிறது. அனைத்து நாடுகளும் தேசங்கள் என அழைக்கப்படுகின்றன. ஆகையினால் தான் இந்நாடுகளின் உலக அமைப்புக்கு 'ஐக்கிய நாடுகள் (United Nations)' என்ற தலைப்புத் தரப்படுகிறது. தேசம் என்ற எண்ணக்கரு முழுமையாக மேற்குலகு சார்ந்தது எனச் சிலர் வாதிடுகின்றனர். இக் கருத்து நவீன காலத்தில் முதன்முதலில் மேற்கில் தோற்றம் பெற்றதென்பது உண்மையாக இருக்கலாம்.

ஆனால் நவீனத்துவ நிலைமைகளில், தேசம் என்ற எண்ணக்கரு பிறநாடுகளிலும் தோன்றியுள்ளது. ஜப்பான் ஒரு சிறந்த உதாரணம். 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் பல்வேறு தீவுகள் ஒன்றிணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நவீன தேசமாக உருவெடுத்த போது ஜப்பான் மீது அதிகளவு மேற்குலக செல்வாக்கு இருக்கவில்லை.

தேசம் என்ற கருத்தினைத் தொடர்ந்து தேசியவாதம் நிலைபெறுகிறது. ஒரு தேசத்தின் உணர்வுகளும் கருத்தியல்களும் தேசத்துடன் உருப்பெற்றன. தேசத்துடன் உணர்வு பூர்வமாகப் பிணைப்புற்றவர்கள் அல்லது தேசத்தின் நலனுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்கள் தேசியவாதிகள் ஆவர்.

தேசம் என்ற பதத்திற்கு மக்கள் பொதுவாக இரு கருத்துக்களைத் தருகின்றனர். இவ்விரு கருத்துக்களை அனைத்து அகராதிகளிலும் காண முடியும். சாதி என்ற பதத்திற்கும் இவ்விரு கருத்துகள் காணப்படுகின்றன. சில சமயங்களில் தேசம் அல்லது சாதி ஒருவரின் சமூக கலாசார அடையாளத்தை அல்லது இனத்துவத்தைக் குறித்து நிற்கிறது. இந்த அர்த்தத்திற்தான் இலங்கை மக்கள் சிங்களவரை, தமிழரை, முஸ்லிம்களை சாதிகளாக அடையாளங் காண்கின்றனர். பிரித்தானியா போன்ற நாடு ஒன்றிலுங் கூட மக்கள் ஆங்கிலேயரை, ஸ்கொட்டிஷ், வெல்ஷ், ஐரிஸ் இனத்தவரை சிலசமயங்களில் தேசங்களாக அடையாளங் காண்கின்றனர். இது தேசம் என்ற பதத்திற்கான ஓர் அர்த்தம் ஆகும்.

மற்றொரு கருத்தும் காணப்படுகிறது. இரண்டாவது கருத்து அதிக விசாலமானதும் அரசியல் சார்ந்ததும் ஆகும். இரண்டாவது கருத்து முதற் கருத்தை மீறுவதாக அல்லது மீறவேண்டியதொன்றென நம்பப்படுகிறது. இவ்வகையில் நோக்கின், பிரித்தானியர் பிரித்தானிய தீவுகளில் வசிக்கும் ஒரு தேசம் ஆவர். எமது நாட்டில் இலங்கையர் ஒரு தேசம் அல்லது தேசியமாக விளங்க வேண்டும். இவ்விரு பதங்களுக்கு இடையில், கருத்துகளுக்கு இடையில், இணைவுகளுக்கு இடையில் ஏதோ ஒருவகை இழுபறிநிலை இருப்பது வெளிப்படை.

இந்த இழுபறி நிலை பிரித்தானியாவைக் காட்டினும் இலங்கையில் அதிகமாகக் காணப்படுகிறது. உதாரணமாக தேச அடையாளம் பற்றிக் கேட்கப்படும் பட்சத்தில் பிரித்தானியாவில் உள்ள எவரும் தான் ஒரு ஸ்கொட்டிஷ் என்றோ, வெல்ஷ் என்றோ அல்லது ஆங்கிலேயர் என்றோ கூறமாட்டார். அவர்கள் தங்கள் தேச அடையாளம் பிரிட்டிஸ் என்றே கூறுவார். ஆனால் பல இலங்கையர் தமது தேச அடையாளத்தை தமது இனத்துவத்துடன் அடையாளங் கண்டு, தாம் சிங்களர் என்றோ, தமிழர் என்றோ அல்லது முஸ்லிம் என்றோ தேசம் தொடர்பான கேள்விக்கு விடையளிப்பர். எமது இனப் பிரச்சினையின் அல்லது குறை வளர்ச்சியின் ஓர் அம்சமாக இதை நோக்கலாம். இது இலங்கைக்கு மட்டும்தான் உரித்தானதொன்று அல்ல. பிறநாடுகளிலே எடுத்துக்காட்டாக பர்மா (மியன்மார்) அல்லது பிலிப்பீன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல நாடுகளில் இதை ஒத்ததொரு நிலைமையைக் காணலாம். இந்தியாவில் ஆச்சரியப்படக்கூடிய விதத்தில், மிகக் கல்வியறிவற்ற ஒருவர் கூட தனது தேச அடையாளத்தை இந்தியன் என்றவாறு அடையாளங் காண்பார்.

**இனத்துவ அடையாளம்:**

இனத்துவ அடையாளத்திற்கும் தேச அடையாளத்திற்கும் இடையிலான இழுபறி தொடர்பாகக் குறிப்பிடக்கூடிய தவறு ஏதுமில்லை. இது ஒரு யதார்த்த நிலை ஆகும். இந்த நாடுகளிலே காணப்படும் இழுபறிநிலைமை, விசாலமான தேச அடையாளம் இனத்துவ அடையாளங்களைக் கடந்து அதன் முழு வடிவத்தை இன்னமும் எய்தவில்லை என்பதை காட்டுகிறது. தேசத்தைக் கட்டியெழுப்பும் பணி பல நாடுகளிலே தாமதமடைவதால் அல்லது இதுவரை நிறைவேற்றப் படாதிருப்பதால் இவ்வகையான இழுபறிநிலை அல்லது முரண் நிலை காணப்படுகின்றது. சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கூட முன்கூட்டியே தேசத்தை கட்டியெழுப்பும் பணி கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளதாய்க் கருதப்பட்ட போதிலும் சில சமயங்களிலே இனத்துவ இணைப்பு மீண்டும் தலை தூக்கியிருந்தது. இதனால் தேச இணைப்பிற்கு மாறான போக்கு தென்படுகின்றது. பிரித்தானியா இதற்கொரு உதாரணம் ஆகும். இந்நிலைமை காரணமாகத்தான் ஸ்கொட்டிஷ் தேசியவாதம், வெல்ஷ் தேசியவாதம் என்பன புத்துயிர்ப்பும் பெற்றுள்ளன. இது எவ்வாறு நடைபெறுகிறது என்ற கேள்விக்குச் சுலபமாக விடைகூற முடியாது. இதற்குரிய விளக்கம் எவ்வகையிற் கூறப்புகினும் அரசியல் சார்ந்ததாகவே அமையும்.

எவ்வாறிருப்பினும் அநேகருக்கு இனத்துவ அடையாளங்கள் அடிப்படை அடையாளங்களாக அமையும் என முடிவு செய்யமுடியும். இனத்துவ அடையாளம் என்பது ஒரு குழுவுக்குரிய அடையாளமே. ஒரு பொதுவான மொழி, பண்பாடு அல்லது மதம் குறிப்பிட்டதொரு இனக் குழுவாக மக்கள் அடையாளங் காணப்படுகின்றனர். இதனாற்றான் இனத்துவத்தை ஒரு சமூக கலாசார வகைப்பாடாக அல்லது சமூக கலாசார குழுவாக்கமாக நாம் கருதுகிறோம்.

வேறு காரணங்களும் காணப்படுகின்றன. ஒரு பொது வரலாறு, பொதுப் பாரம்பரியங்கள் என்பன அவற்றுட் சில.

உலகின் அனைத்து இனக் குழுக்களும் இங்கு கூறப்பட்ட எல்லாப் பண்புகளின் அடிப்படையில் வகுக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. வேறு வார்த்தையிற் கூறின், பிரிவுகள் தூய்மையானவை அல்ல. அவை ஒன்றுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று சார்புடையனவாயும், பெரும்பாலும் கலப்புற்றனவாயும் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் சிங்கள மக்களிடையே காணப்படுகின்றனர். அதே போன்று தமிழர் மத்தியிலும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய இரு மதத்தவர்களும் காணப்படுகின்றனர். எனவே சிங்கள, தமிழ் இனத்துவங்களைப் பொறுத்தவரை மூலப் பிரமாணமாக மொழியே போல் தோன்றுகின்றது.

**இனத்துவ மத வகைப்பாடு**

**இலங்கை**

| | | | |
|---|---|---|---|
| சிங்களவர் | 74 | பௌத்தர்கள் | 70 |
| தமிழர் | 18 | கிறிஸ்தவர்கள் | 8 |
| முஸ்லிம்கள் | 7 | இந்துக்கள் | 15 |
| ஏனையோர் | 1 | இஸ்லாமியர் | 7 |

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இது பொருத்தப்பாடாகத் தென்படவில்லை. அவர்கள் பிரதானமாக மத அடிப்படையில் அடையாளங் காணப்படுகின்றனர். அவர்களிற் பெரும்பான்மையினர் தமிழையும் ஏனையோர் சிங்களத்தையும் தம் தாய்மொழியாகப் பேசுகின்றனர்.

எனவே 'இன அடையாளம் என்றால் என்ன?' என்ற கடினமான வினாவிற்குரிய விடையை, விளக்கத்தை ஒரு வரலாற்றுப் பார்வையூடாகத்தான் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.

## இனக் குழுக்களின் தோற்றமும் பண்பும்.

மனித வரலாற்றின் ஆரம்ப காலகட்டத்திலிருந்தே இனக்குழுக்கள் காணப்பட்டுள்ளன எனச் சிலர் தவறாக நம்புகின்றனர். இது உண்மையாக அமைய முடியாது. மனித வளர்ச்சியின் அல்லது வரலாற்றின் குறிப்பிட்டதொரு காலக்கட்டத்தில் இனங்கள் தோற்றம் பெற்றன என அனைத்து வரலாற்றுச் சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. எனினும் அனைத்து இனக்குழுக்களும் ஒத்தநிலையில் அல்லது ஒரே காலகட்டத்தில் தோற்றம்பெற்றன என்பது அல்ல இதன் கருத்து. இனக் குழுக்களின் தோற்றம் நாட்டுக்கு நாடு வேறுபட்டமைக்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. தோற்றத்தின் பாணியும் நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்பட்டது.

இலங்கையில் இனச் சமூகங்களின் தோற்றமும் வளர்ச்சியும் மிகவும் சர்ச்சைக்கும் வாதத்திற்கும் உரிய விடயமாகிறது. அவர்கள் விஜயனின் வழித் தோன்றல்கள் எனவும் அவர்களைப்பின் தொடர்ந்து வந்தவர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் எனவும் சிங்களவரில் அநேகர் நம்புகின்றனர். அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது சர்ச்சைக்குரியதொரு விடயமாகவே உள்ளது.

மகாவம்சத்தில் இடம்பெறும் விஜயன் பற்றிய கதை அரச வம்சாவளியை அறிந்து கொள்வதற்குரிய முயற்சியே அன்றி, மக்களின் வம்சாவளியைத் தெரிந்து கொள்வதற்கான ஒன்றாக அமையவேண்டிய அவசியம் இல்லை. இங்கு கூறப்பட்ட வரலாறு சிங்கள மக்களின் தோற்றம் பற்றியதென யாராயினும் கருதினாலும் கூட, பெண் வம்சாவளி மூலம் தென்னிந்தியாவைச் சேர்ந்ததாயிருத்தல் வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். விஜயனும் அவனது சகாக்களும் தமது மனைவியரை மதுரையிலிருந்து கூட்டி வந்தனர்.

விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்கள் குறை மனிதப் பண்புடையோர் என சிங்கள மக்கள் தரப்பில் வாதிடப்படுகிறது. விஜயனின் வருகைக்கு முற்பட்டோர் தமிழர் எனத் தமிழ் மக்கள் தரப்பில் கூறப்படுகிறது. இங்கு கூறப்படும் பகுதி கி. மு. 6 ம் நூற்றாண்டு என்பதுடன் அக் காலகட்டத்தில் இந்நாட்டில் நன்கு ஒழுங்கமைந்த இனக் குழுக்கள் காணப்பட்டன என்பதற்கான எவ்வித சான்றும் இல்லை.

பல்வேறுபட்ட இனக்குழுக்கள் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் காணப்பட்டிருந்ததை பழைய சாசனங்களும் வரலாற்று ஏடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கின்றன. சிங்கள, தமிழ் இனத்துவ அடையாளங்கள் இக் குழுக்களிலிருந்தே தோற்றம் பெற்றமை போல் தென்படுகிறது.

இப் புராதன காலகட்டத்தில் இந்தியா அல்லது இலங்கை என்ற தெளிவான பிரிவுகள் காணப்படவில்லை. தற்போது தென்னிந்தியா என அழைக்கப்படும் பிராந்தியத்தில் தமிழ் இனம் தோற்றம் பெற்றது போலத் தென்படுமாற்போல, சிங்கள இனக் குழு தென்னிந்திய அடையாளங்களுடன் பிரதான தொடர்புற்ற நிலையில் இலங்கையில் தோற்றம் பெற்றதாக நம்பப்படுகிறது. மிக ஆரம்ப நிலையிலிருந்தே இலங்கையின் வட பாகங்களை உள்ளடக்கி தமிழ் இனக்குழு தோற்றம் பெற்றமைக்கான சாத்தியக்கூறு அதிகம் காணப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட விளக்கம் அநேகருக்கு அவர்களது வைரமான நம்பிக்கைகள் காரணமாக ஒரு புதிராகவே காணப்படலாம். ஆனால் சிங்கள, தமிழ் இன அடையாளங்களின் பரிணாமம் பற்றி அறிவுசார்ந்த முறையில் தெரிந்து கொள்வதற்கு வேறெவ்வித நியாயமான மார்க்கமும் இல்லை. இன அடையாளங்களின் மூலம் பற்றி இவ் வகையாக விளங்கிக் கொள்ளும் பட்சத்தில் யார் இங்கு முதலில் வந்தார்கள், யார் இங்கு முதலிற் காணப்பட்டனர் போன்ற கேள்விகள் அர்த்தமற்றவையாகின்றன.

2004 ஆம் ஆண்டில் பாடசாலைப் பிள்ளைகளுக்கான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் திட்டத்தினூடாக நடத்தப்பட்ட பல கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் போது 'சரோஜா' என்ற பிரசித்தி பெற்ற திரைப்படம் காண்பிக்கப்பட்டதுடன் பல பிரதான நிகழ்ச்சிகள் பற்றி மாணவர்களிடம் கருத்துக்களைக் கூறுமாறு கேட்கப்பட்டது. போரினால் இடம் பெயர்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு உதவிய பாடசாலை ஆசிரியரை, 'இது எமது நாடு, சிங்களவராகிய நாமே இங்கு முதலில் வந்தோம்' எனக் கூறி பாடசாலை ஆசிரியரை எச்சரிக்கை செய்த சிறிசேனா என்ற கிராமத்தவன் தோன்றும் முக்கிய நிகழ்ச்சியை பல மாணவரும் குறிப்பிட்டனர். பல பாடசாலைகளைச் சார்ந்த அநேக இளம் மாணவர்கள் 'யார் இங்கு முதலில் வந்தார்கள் என்பது அல்ல முக்கியம். இந்நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பதும் அவர்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதுமே முக்கியம்' என அபிப்பிராயம் தெரிவித்தனர்.

## மனித பரிமாண வளர்ச்சி

குறிப்பிட்டதொரு வரலாற்றுக் காலகட்டத்தில் சுலபமாக விளங்கிக் கொள்ள முடியாத ஒரு புதிர் அல்லது பிரச்சினை காணப்படின் 'உலக காலம்' என்றழைக்கப்படும் அடிப்படைக்குள் அப்பிரச்சினை நோக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டின் வரலாறை அல்லது சமூக பரிணாம வளர்ச்சியை தனித்தனியே பிரித்தெடுத்து வேறு வேறாக விளங்கிக் கொள்வதற்கும் சிலர் முற்படுகின்றனர். இந்த குறுகிய அணுகுமுறை குறிப்பாக குறுகிய முடிவுகளுக்கே வழிவகுக்கும். இனப்பிரச்சனையை புரிந்து கொள்வதற்கு அப்பிரச்சினை, மிக விரிவான மனித பரிணாம வளர்ச்சியினதும் வரலாற்றினதும் பின்னணியில் நோக்கப்படல் வேண்டும். இலங்கை வரலாறு என்ற ஒன்றும், மனித வரலாறு என்ற ஒன்றும் இவை ஒன்றையொன்று நிராகரித்துக் கொள்வதில்லை.

இனக்குழுக்கள் மனிதர்களின் ஓர் அங்கம் என்பது சர்ச்சைக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம். விஞ்ஞான நோக்கில் மனிதர்கள் ஹோமோ சேப்பியன்ஸ் (Homosapiens) என அழைக்கப்படுகின்றனர். ஏறத்தாழ 300 லட்சம் வருட வரலாறு ஒன்று உள்ளது. இக் காலகட்டத்தில் மிகப் பழமையான எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவ்வெலும்புக்கூடுகள் ஆபிரிக்காவிற் பரவலாகக் காணப்பட்டுள்ளன. எனவே மனிதர்கள் இப் பகுதிகளிற் தோற்றம் பெற்றுப் பின் உலகு பூராக ஏறத்தாழ 60 இலிருந்து 100 ஆயிரம் வருடங்களுக்கு முற்படப் பரவினர் என நம்பப்படுகிறது. உலகின் ஏனைய பகுதிகளில் மனித பரம்பல் பற்றி 'வெளிப்புற ஆபிரிக்கக் கோட்பாடு' விளக்குகிறது.

மத்திய கிழக்கில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழைய எலும்புக்கூடுகள் நூறாயிரம் வருடங்களுக்கும் முற்பட்டவை. மத்திய ஐரோப்பா அல்லது பிரான்சிற் காணப்பட்ட அதி தொன்மையான எலும்பு கூடுகள் 60 தொடக்கம் 80 ஆயிரம் வருடங்களுக்கும் முற்பட்டன. சீனா, ஜப்பான், நோடிக் நாடுகள், தென் ஆசியா ஆகிய நாடுகளில் இக் காலகட்டங்களுக்குச் சற்றுப் பிற்பட எலும்புக்கூடுகளுக்கும் ஆபிரிக்காவிற் காணப்பட்ட எலும்புக்கூடுகளுக்கும் இடையிலான ஒற்றுமைகள் இவற்றுக்கிடையிலான தொடர்பையும் மிக ஆதிகால ஹோமோ சேப்பியன்கள் ஆபிரிக்காவிற்கு வெளியேயும் பரவியிருந்தனர் என்பதையும் காட்டுவதாக விஞ்ஞானிகளால் நடத்தப்பட்ட ஆய்வுகள் புலப்படுத்துவதாக DNA ஆய்வுகள் தெரிவிக்கிறது.

ஜப்பானில் உள்ளவர்கள் மொங்கொலோயிட் எனப்படுவோர், எவ்வாறு ஐரோப்பாவில் உள்ள கோக்கேசியன்கள் என்பவர்களிடம் இருந்தும் ஆபிரிக்கர்களிடமிருந்தும் (நீக்குரொயிட்டு) எவ்வாறு வேறுபடுகின்றனர் என்று சில வாசகர்கள் வினாவலாம். இப்பிராந்தியங்களில் மிக நீண்ட காலமாக வாழ்ந்ததையடுத்து சுற்றாடல் மற்றும் சூழலியல் காரணிகளால் இவ்வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

உலகில் நெகிழாத இன வேறுபாடுகள் காணப்படுவதை விஞ்ஞானிகள் நம்புவதில்லை. மானிடவியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாலமான வகைப்பாடுகளாவன: கோக்கேசியன், மொங்கொலொயிட், நீக்குரோய்ட். இப்பிரிவுகள் மாறாத் தன்மை கொண்டவை அல்ல. அவை மாறுகின்றன. அத்துடன் அவற்றிலே பல கலப்பு வகைப்பாடுகளும் உண்டு. தெற்கே புலப்படுவது கறுப்பு வெள்ளை என்ற பிரிவே.

சிங்களவரும் தமிழரும் இரு வேறுபட்ட இனங்களைச் சார்ந்தவர்கள் எனக் கருதுவது முற்றிலும் தவறானது. இவ்விரு இனத்தவரும் நீக்குரோய்ட் என்ற விசாலமான பிரிவில் உள்ளடங்குவதுடன் இவர்களுக்கு இடையிலான வேறுபாடுகள் இனத்துவம் சார்ந்ததேயன்றி சாதித்தியம் சார்ந்ததன்று.

சிங்களவர் ஆரிய வம்சத்தினர் எனவும், தமிழர் திராவிட வம்சத்தினர் எனவும் சிலர் கூறும்போது அவர்களது மொழிகள் மொழிக் குழுக்களின் இரு பெரும் பிரிவுகளில் உள்ளடங்குவன என்பதே கருத்தாகும். இந்தோ ஆரிய, திராவிட பிரிவுகள் சாதித்திய பிரிவுகள் (racial categories) அல்ல. இவ்விரு மொழிகளும் இரு மொழிக் குழுக்களில் உள்ளடங்கும் போதிலும், அவை ஒரே மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை எனச் சில கல்விமான்கள் வாதிடுமளவிற்கு, அநேக கல்விமான்கள் இவ்விரு மொழிகளுக்கும் இடையிற் கணிசமான ஒற்றுமைகளை இனங் கண்டுள்ளனர்.

> மனித வர்க்கம் ஒன்றே என்ற கருத்தை அங்கீகரிப்பதில் விஞ்ஞானிகள் பொது உடன்பாடொன்றை எய்தியிருக்கின்றனர். அதாவது ஹோமோ சேப்பியன்கள் என்ற ஒரே வகுப்பை அனைவரும் சார்ந்தவர்கள். அனைத்து மனிதரும் பொதுவானதொரு வர்க்கத்திலிருந்து தோற்றம் பெற்றவர்கள் என்ற கருத்து விஞ்ஞானிகள் மத்தியிற் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது; அத்துடன் வேறுபட்ட மனிதவர்க்கக் குழுக்களுக்கு இடையிற் காணப்படும் வேறுபாடுகள் பரிணாம வளர்ச்சி காரணிகளின் செயற்பாட்டால் தோன்றியுள்ளன.
>
> **Unesco 1950**
>
> சாதிபற்றிய பிரகடனம்.

எமது பிரதான விடயமாகிய மனித பரிணாம வளர்ச்சி தொடர்பாக மீண்டும் கருத்திற் கொள்ளும்போது, உலகிற் பரந்துள்ள அனைத்து ஹோமோ சேப்பியன்களும் ஆரம்பத்தில் இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர் என்பது தெளிவு. இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கை என்பது சமூக அல்லது வேறெந்தவொரு பிரிவினதும் இடையூறு அற்ற, இயற்கையுடன் நெருங்கிய வாழ்க்கை என்பதாகும். முதற் சமூக நிறுவனமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் பெற்றது குடும்பம். அதன் பின்னர் கூட்டுக் குடும்பங்களின் அடிப்படையிற் தோற்றம் பெற்ற மரபுக்குழு (tribe) வளர்ச்சியுற்றது. மரபுக்குழு அரசுகள் அல்லது பல மரபுக் குழுக்களை நிருவகிக்கின்ற அரசுகள் காணப்பட்டுள்ளன.

இனமரபுக்குழுக்களின் காலப்பகுதியை அடுத்து இன சமூகங்கள் வளர்ச்சியுற்றதுடன் அரசுகளின் உருவாக்கம் இவ் வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டிருந்தது போலும். மிகப் பழைய அரச நிறுவனங்கள் மத்திய கிழக்கில் ஏறத்தாழ 6000 வருடங்களுக்கு முன் காணப்பட்டுள்ளன. எனினும் சாசனங்களின் அடிப்படையில் நோக்கும் போது அரச நிறுவனங்கள் இலங்கையில் கி. மு. 1ஆம் 3ஆம் நூற்றாண்டு காலப்பகுதிகளிற் தோற்றம் பெற்றமை தெரிய வருகிறது. இன சமூகங்களின் உருவாக்கம் இதற்கு மிகப் பிற்பட்ட காலப் பகுதியிலேயே ஏற்பட்டுள்ளது. இந்த நாட்டிலே மிகப் பழங்காலந் தொட்டு பல்வேறு இனக்குழுக்கள் இங்கு வந்து வாழ்ந்ததை அவதானிக்க முடியும்.

மத்திய கிழக்கு தவிர்ந்த உலகின் பல பாகங்களில் இனக் குழுக்களின் உருவாக்கம் மத்திய காலப் பகுதியில் அல்லது புராதன காலத்தின் பிற்பகுதியில் ஏற்பட்டுள்ளது. 'உலக கால, கணிப்புத் திட்டத்தை' நோக்கும் போது, இன சமூகங்களின் உருவாக்கம் மனித வளர்ச்சியின் ஒரு கட்டம் மட்டுமே.

## மனித பரிணாம வளர்ச்சி

ஹோமோ சேப்பியன்கள்

3000,000 வருடங்கள்

இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை.

மரபுக்குழுக்கள்

அரச உருவாக்கம்

இன சமூகங்கள்

தேசிய அரசுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன உருவாக்கம்.

இன சமூகங்கள் பொதுவானதொரு முறையிற் தோற்றம் பெறவில்லை. சில குறிப்பிட்ட நாடுகளில் ஆரம்பகால மரபுக்குழுக்கள் சனத் தொகைப் பெருக்கம், கலாசார விருத்தி என்பவை காரணமாக இன சமூகங்களாக வளர்ச்சியுற்றமைக்கு ஆதாரங்கள் உள்ளன. பொதுக் கலாசாரங்களை வளம் படுத்தல், ஸ்திரப் படுத்தல் மூலம் இன சமூகங்களை உருவாக்குவதில் அரசாங்கம் பிரதான பங்கு வகித்த சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட இரு சந்தர்ப்பங்களிலும், பல மரபுக்குழுக்கள் ஒன்றிணைந்தமை தென்படுகிறது.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் தமேதா என்று அழைக்கப்படும் மரபுக்குழுவிலிருந்து தமிழ் இன சமூகம் தோன்றியது எனக் குறிப்பிடும் சுவாரஸ்யமான கருதுகோள் ஒன்று உள்ளது. எனினும் இதன் பரிமாண வளர்ச்சி தொடர்பாக எவரும் முழுமையான திடமான கருத்தைக் கொண்டிருக்க முடியாது. இலங்கையில் சிங்கள இனத்துவ அடையாளாத்தின் உருவாக்கத்தில் அரசு அல்லது அரச வம்சம் பிரதான பங்கு வகித்தது என வெஸ்லி குணவர்த்தனா வாதாடியுள்ளார்.

ஆதிகாலத்தில் இவ்விரு அடையாளங்களுக்கும் இடையில் குறிப்பிட்ட எந்தவொரு பகைமையும் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த இரு அடையாளங்கள் தனித்தனியாக வளர்ச்சி அடையவில்லை. அவை ஒருமித்த நிலையில் வளர்ச்சியுற்றன. சிங்கள இனத்தின் உருவாக்கம் பெருமளவில் அரசாங்கத்தின் நிருவாகத்திற்கு உட்பட்டமையால், தமேத குழுக்கள் அல்லது தமிழர்களிற் பெருமளவினர் சிங்கள இனத்துவ அடையாளத்தில் உள்ளீர்க்கப்பட்டிருத்தல் சாத்தியமானதொன்று.

மத்திய காலகட்டத்தில் சிங்கள அரசவம்சங்களின் வீழ்ச்சியின் போது, இலங்கையின் வடபகுதியில் புறம்பான தமிழ் அடையாளத்தைக் கொண்ட இராச்சியங்கள் வளர்ச்சியுற்றன போலும். ஆனால் இவ்விரு வகையான சிங்கள, தமிழ் இராச்சியங்கள் இன்று நாம் காண்கின்ற இன முரண்பாடுகளின் எவ்வித சாயலுமின்றி ஒத்து இயைந்து செயற்பட்டன.

இலங்கைச் சமூகம் சிங்களவராலும் தமிழராலும் மட்டும் உள்ளடக்கப்பட்டதொன்று அல்ல. இங்கு வேறு குழுக்களும் காணப்படுகின்றன. தற்போது காணப்படும் சிங்களவர், தமிழர் முரண்பாடுகளுக்கு மிதமிஞ்சிய அளவில் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் வழமையாக மக்கள் இதை மறக்க முயற்சிக்கின்றனர். முஸ்லிம்களும் மிக முக்கியமானதொரு இனக் குழு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறத்தாழ 14 ஆம் நூற்றாண்டில் இருந்து தென் ஆசியாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் உள்ள ஏனைய பல குழுக்கள் போல, இஸ்லாமைப் பின்பற்றுபவர்களும் பிற நாடுகளிலிருந்து இலங்கைக்கு குடி பெயர்ந்தனர். குறிப்பாக ஆண்கள் வியாபாரம், வர்த்தகம் நோக்கங்களுக்காக வந்ததுடன் சிலர் தமிழ், சிங்கள உள்நாட்டுப் பெண்களை மணந்து நிரந்தரமாகத் தங்கினர். முஸ்லிம்கள் தென்னிந்தியா, மலேயா, மற்றும் சில அராபிய நாடுகளிலிருந்து நேரடியாகவே வந்தனர். முஸ்லிம்களிற் சிலர் முற்றாக உள்நாட்டு மூலத்தைக் கொண்டவர்கள். அதாவது காலனித்துவ காலத்தின் பிற்பகுதியில் கிறிஸ்தவர்கள் செய்தது போல, இஸ்லாத்துக்கு மதம் மாறினர்.

இன சமூகங்களின் தோற்ற வளர்ச்சி தொடர்பான முடிவுரையின் சுருக்கம் வருமாறு:

- சிங்களவர், தமிழர், முஸ்லிம்களுக்கு இடையில் வெளிப்படையான சாகித்திய வேறுபாடு எதுவும் கிடையாது. தப்பெண்ணங்களையும் தவறான கருத்துகளையும் மட்டுமே உள்ளடக்கி நிற்கும் சாகித்திய கோட்பாடுகளுடன் விஞ்ஞானிகள் பொதுவில் உடன்படுவதில்லை. சகல மக்களும் ஒரு பொது மானிடவர்க்கத்தைச் சார்ந்தவர்கள்.

- சிங்களவர், தமிழர், முஸ்லிம்களுக்கு இடையிலான வேறுபாடுகள் இன வேறுபாடுகள் மட்டுமே. இனவேறுபாடுகள் சமூக வளர்ச்சியின் ஓர் அங்கமேயன்றி பாரபட்சம் அல்லது குரூர யுத்தத்திற்குரிய விடயங்கள் அல்ல.

- இன வேறுபாடுகள் ஒருவருடைய மொழி, மதம் அல்லது கலாசாரம் சம்பந்தமான விடயங்கள் ஆதலால் முக்கியத்துவம் பெறுகின்றன.

- இலங்கை வரலாறு முழுவதும் தமிழரும் சிங்களரும் ஒருவரோடு மற்றவர் போரிட்டுக் கொண்டிருந்தனர் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை. சமுதாயம், அரசியல்பண்பு காரணமாக தற்போதைய இன முரண்பாடு நவீன காலத்திற் தோற்றம் பெற்றதெனவே கூற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.

# இன முரண்பாட்டின் மூலங்கள்

இலங்கை ஒரு பல்லின, பல்மத சமூகம் என்பதையும், அனைத்து மக்களுக்கும் சம, உரிமைகள் இருக்க வேண்டும் என்பதையும் எம்மாற் புரிந்து கொள்ள இயலாதிருப்பதே தற்போதைய இன முரண்பாட்டுக்கான பிரதான மூலம் ஆகும்.

நாட்டின் மக்கட் பிரிவின் சரியான கட்டமைப்புப் பற்றி புராதன கால மக்கள் அறிந்திருக்கவில்லை என்பது சாத்தியமானதொரு விடயமே. இவ்விடயம் பற்றி அவர்கள் அதிகளவில் அக்கறை கொள்ளவில்லை. இன்று போல தேசிய அரசியலில் அவர்கள் ஈடுபட்டு இருக்கவில்லை. அவர்கள் கிராமச் சூழலில் வசித்தார்கள். அத்துடன் பெரும்பாலான கிராமங்கள் பிரத்தியேகமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் கிராமங்களாக விளங்கியிருக்கலாம். இனங்கள் கலந்து வாழ்ந்த கிராமங்களிற் கூட வேறுபாடுகள் பற்றி அதிக அக்கறை காட்டப்படவில்லை. அவர்கள் வேறுபாடுகளைத் தாங்கிக் கொண்டனர். அத்துடன் வெளிப் பிராந்தியங்களிலிருந்தும் பிற இன அல்லது மதப் பின்னணிகளிலிருந்தும் வந்தவர்களை உள்ளீர்த்து அவர்களுடன் ஒருங்கிணைந்து வாழ்வது அவர்களுக்கு இலகுவானதாகவே அமைந்தது.

இன ஒருங்கிணைவு இலகுவானதொன்றாக அமைந்ததுடன் அது கிராம மட்டத்தில் நிகழ்ந்தது.

நாட்டைச் சுற்றிப் பயணம் செய்தவர்கள் அவ்வேறுபாடுகள் பற்றி அறிந்திருந்தனர். அவ் வேறுபாடுகள் கண்டத்திற்கு உட்படவில்லை. மாறாக அவை மனித ஆவல், ஆர்வம் என்பவற்றின் அடிப்படையில் மதிக்கப்பட்டன. மொழி, கலாசாரம், மதம் என்பவற்றில் பல அம்சங்கள் ஒன்றிலிருந்து மற்றதற்கு உள்ளீர்க்கப்பட்டன. சமூகத்தின் பல்கலாசார, பல்மதத் தன்மை பற்றி மக்கள் அக்கறை கொள்ளாவிடினும், அது இயல்பானதொன்றென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உண்மையில் அரசர்கள் அல்லது ஆட்சியாளர்கள் நாட்டின் மக்கட் பிரிவின் கட்டமைப்பு பற்றி அல்லது தாம் நிருவகித்த பிராந்தியங்கள் பற்றி கணிசமானளவு அறிந்திருந்தனர். புராதன அரசுகள் சமூகங்களை நிருவகித்தனவே அன்றி பிராந்தியங்களை அல்ல. சமூகங்கள் ஒரே சமயத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றியிருந்த போதிலும் பிராந்தியத்திற்கும் பிராந்தியம் அச் சமூகங்கள் வேறுபட்டனவாகக் காணப்பட்டன. ஐரோப்பாவைப் போலன்றி, ஆசியாவின் புராதன மன்னர்கள் மத, மற்றும் ஏனைய விவகாரங்கள் தொடர்பாக சகிப்புத் தன்மை மிக்கவர்களாக விளங்கினர். அவர்களது ஆட்சியின் கீழ் வேறுபட்ட மதங்கள், மொழிகள், கலாசாரங்கள் என்பன ஒரே சமயத்தில் வளர்ச்சி கண்டன. இது வரலாற்றாசிரியர்களால் ஒத்துக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும்.

## சகியாமையின் தோற்றம்.

இன அல்லது மத வேறுபாடுகள் தொடர்பான சகியாமை உணர்வு நவீன காலத்திற் தோற்றம் பெற்றதொன்றே. நவீனத்துவம் கெடுதியானது என்பதோ இன்றேல் நாம் கடந்த காலத்திற்கு மீண்டும் செல்ல வேண்டும் என்பதோ இதன் அர்த்தம் அல்ல. நவீனத்துவத்துடன் ஏற்பட்ட சகியாமையை எவ்விதம் வெற்றி கொள்ளலாம் என்பதைக் கண்டறிய வேண்டும் என்பதே இதன் பொருள் ஆகும்.

இந் நிலைமையைப் பாதிக்கும் இரு நிகழ் முறைகள் காணப்பட்டுள்ளன. பொதுவாக அவை காலனித்துவம், நவீனத்துவம் என அழைக்கப்படமுடியும். காலனித்துவ ஆட்சியாளர் வருகை தந்து உள்நாட்டு மதங்களுக்கு எதிராகப் பாரபட்சமாக இயங்கியபோது அவர்கள் இந்த நாட்டில் மத சகியாமைக்கான வித்துகளை நாட்டிற் பரப்பினர். அவர்கள் உள்நாட்டு மதங்களுக்கு எதிராகப் பாரபட்சமாக நடந்தது மட்டுமன்றி தத்தமது மதங்களுக்கு இடையிலேயே பாரபட்சம் காட்டினர்.

நவீனத்துவமும் முதலாளித்துவத்திற்கு இணையானதாய்க் காணப்படுகிறது.

**அனைத்தும் கொழும்பில் ஆரம்பமாகின.**

முதலாளித்துவத்தின் வளர்ச்சியை அடுத்து, பண்டைய கிராமியப் பொருளாதாரங்கள் உடைந்து போயின. ஒரு தேசியப் பொருளாதாரம் உருவாக்கப்பட்டது. கல்வி, போக்குவரத்து, தொடர்பாடல், ஊடகத்துறை என்பன வளர்ச்சியுற்றன. சனத்தொகை பாரியளவில் அதிகரித்தது. மத்திய வர்க்கம் எனப்படும் ஒரு புதிய சமூக அமைப்பு உருவாயிற்று. மக்கள் கிராமியப் பிரதேசங்களிலிருந்து மாநகரங்களுக்கு நகர்ந்து கொழும்பு, மற்றும் சுற்றுப் புறங்களில் வாழ்ந்த 'பிறரையும்' சந்தித்தனர்.

முதலாளித்துவத்தின் பிரதான செயற்பாடாக, தனியாள் மற்றும் குழுநிலைப் போட்டி அமைகிறது. இந்த எலி ஓட்டமும் போட்டியும் நாட்டின் இனத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளைப் பாதித்தில் ஆச்சரியப் படுவதற்கு எதுவுமில்லை. போட்டித்தன்மை சார்ந்த தனிநபர் வாதத்தின் வளர்ச்சியை அடுத்து தனிநபர்கள் தம்மைப் பாதுகாக்கும் குழுக்களுடன் அடையாளப் படுத்த விழைந்தனர். அவர்கள் தம்மை மத, சாதி, பிராந்திய, இன அடிப்படையிலான குழுக்களாக பிரித்துக் கொள்ளத் தொடங்கினர்.

இவற்றுள் இனத்துவ குழுக்களே மிக ஆபத்தானவை. அவை டைனமைற்றுகள் போன்றன.

இனக் கூறாக்கத்தைத் தீவிரப்படுதிய வேறு சூழல்களும் காணப்பட்டன. குடித்தொகை மதிப்பீடு அறிமுகப்படுத்தப் பட்டதை அடுத்து மக்கள் தமது சமூகத்தின் கட்டமைப்பு பற்றி அறிந்து கொண்டனர். அவர்களது அடையாளங்கள் உறை நிலை அடைந்தன. ஒருவர் தன்னை சிங்களவர் என்றோ அல்லது தமிழர் என்றோ அடையாளங் காணும் பட்சத்தில், ஆரம்பத்தில் அவரது அடையாளம் பற்றி திடமாக அவர் அறிந்திருப்பினுங் கூட, அவரது அடையாளம் பதிவு செய்யப்படுகிறது. பின் அவ்வடையாளம் பிள்ளைகளுக்குத் தந்தை வழியாக வழங்கப் படுகிறது. (தாய் வழியாக அல்ல.) மக்கள் பிறர் பற்றியும் தமது சந்ததி பற்றியும் அறிய வந்தபோது அவர்களின் உணர்வுடன் அதிகளவு தப்பெண்ணமும் கலந்திருந்தது.

முழு இன முரண்பாடும் கொழும்பு மேல் வர்க்கம், மற்றும் மத்திய தர வர்க்கம் என்பவற்றிலிருந்தே தொடங்கியது. சாதாரண மக்கள் மத்தியிலும் கிராமத்தவர் மத்தியிலும் அவர்கள் இந் நோயைத் திணித்தனர். அரசியலே இத்தகர்விற்குக் கருவியாக அமைந்தது.

## இனத்துவத்தின் அரசியல்.

அரசியல் பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்ட புதியதொரு செயற்பாடாகும். கடந்த காலங்களில் மக்களோ அல்லது மேலாதிக்க வர்க்கத்தினரோ அலுவலர்கள் என்ற கோதாவில் இயங்குவது தவிர நிருவாக விடயங்களில் ஈடுபட அனுமதிக்கப் படவில்லை. ஆனால் நவீன சிந்தனை வித்தியாசமானது. நவீனகால அரச நிருவாகம் குடிமக்களை பொது விவகாரங்களில் ஈடுபடுத்துகிறது. ஆகவே அரசியல் ஒரு தீங்கான விடயம் அல்ல. உண்மையில் அது ஓர் அவசியமான நன்மை பயக்கும் விடயமே. அரசியலை எவ்விதம் நடைமுறைப்படுத்துகிறோம் என்பதே இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அம்சம்.

1833 இல் அறிமுகப்படுத்தப் பட்ட கோல்புறூக்- கமறன் சீர்திருத்தத்தின் பின், சட்ட சபை உருவாக்கப் பட்ட போது உள்நாட்டு பிரதிநிதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இது இன அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் இது ஒரு பிரச்சினையாகத் தென்படவில்லை. சட்ட சபைக்கு தெரிவாவதற்கு தகைமை பெற்ற எவரும் இருக்கவில்லை. அதிக எண்ணிக்கையில் மக்கள் ஆங்கிலக் கல்வி பெற்று தகைமை உடையவர்களாக ஆனபோது, சட்ட சபை முறையில் குறை காணப்பட்டது. சிங்கள மேலாதிக்க வர்க்கம் தமது இனத்தின் பெரிய எண்ணிக்கை காரணமாக அதிகளவு பிரதிநிதித்துவத்தைக் கோரியது. சிங்களச் சமூகத்தில் கண்டிச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் அல்லாத சிங்களவர் என்ற இரு பிரிவினர் உள்ளதாக எடுத்துக் காட்டப்பட்ட போது, இரு பிரிவினருக்கும் சம பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

எவ்வாறெனினும் சிங்கள மேலாதிக்க வர்க்கம் திருப்தியீனப்படும் வகையில் இன ரீதியான பிரதிநிதித்துவத்தின் பிரதான போக்கில் 1931 வரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. 50 சதவீதமான பிரதிநிதித்துவம் சிங்கள மக்களுக்கு கொடுக்கப்பட்ட அதே சமயம் மிகுதி 50 சதவீதமானது சிறுபான்மையினருக்காக ஒதுக்கப்பட்டது. சில தமிழ் அரசியற் பிரிவினரால் 50 இற்கு 50 என்ற அடிப்படையில் பிரதிநிதித்துவம் கோரப்பட்டதற்கு இதுவே காரணமாக அமைந்தது.

### பயனற்றதோர் சர்ச்சை

பிரதிநிதித்துவம் தொடர்பான சர்ச்சை பற்றிய விடயங்கள் கவனமாக ஆராயப்படின், இது சம்பந்தப் பட்ட முழு விவகாரமே துரதிஷ்டமானதொன்று என்பது தெளிவாகும். இப் பிரச்சனை பெரும் அளவிற் பிரித்தானியரால் உருவாக்கப்பட்டது. பிரித்தானியர் பிரித்து ஆளும் கொள்கையைக் கடைப் பிடித்திருந்தனர். பல நாடுகளில் காலணித்துவ எசமான்கள் தம் வசதிக்காக சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினருக்கு எதிராக அல்லது சில சமயங்களிற் பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டி விட்டனர்.

எங்ஙனமாயினும் இனவாரியான பிரதிநிதித்துவம் நன்மையான ஒரு கொள்கை அல்ல. சனத்தொகை விகிதாசாரங்களை உதாசீனம் செய்து சம விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றினால் நிலைமை கெடுதியானதாகவே அமையும். இது முரண்பாட்டுக்கே வழிவகுக்கும். எனினும் இன முரண்பாட்டு மூலத்திற்கான முழுக் குற்றச்சாட்டும் பிரித்தானியர் மீதோ பிரதிநிதித்துவ முறை மீதோ சுமத்தப்பட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் ஏலவே முன்னர் குறிப்பிட்டவாறு இப்பிரச்சினையானது சமூக மாற்றம் தொடர்பாக விரிந்த சூழமைவில் ஆராயப்பட வேண்டும். பிரச்சினைக்குரிய மூலங்கள் எதுவாயிருப்பினும், இந் நாட்டிற் குறிப்பாகத் தேசியத்தைக் கட்டியெழுப்பும் பணி தோல்வி கண்டதன் பின்னணியில் முரண்பாடு வளர்ச்சியுற்றமை ஆராயப்பட வேண்டும்.

## தேசத்தைக் கட்டியெழுப்பும் பணி தோல்வி கண்டமை.

சுதந்திரத்தை எய்தும் முயற்சியில், குறிப்பாகக் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுவதில் தேசியவாதம் ஓர் அவசியமான அம்சம் என்பதிற் சந்தேகம் இல்லை. ஆனால் இரு வகையான தேசிய வாதங்கள் உள. ஒன்று குடியியற் தேசியவாதம்; மற்றது இனரீதியான தேசியவாதம்.

### தேசியவாதத்தின் இரு வகைகள்

குடியியற் தேசியவாதம் என்பது இன, மத, அல்லது வேறெந்தவொரு வேறுபாட்டையும் கடந்து மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாத்து அவற்றை முன்னேற்றும் பாங்கிலான ஒரு நாட்டுக் குடிமக்களின் அல்லது சாதாரண மக்களின் தேசிய உணர்வைக் குறிக்கும்.

மறுபுறம் இனரீதியான தேசியவாதம் என்பது குறிப்பிட்டதொரு இன சமூகம் பெரும்பாலும் பிற இன நலன்களுக்கு எதிரான வகையில் தனது சொந்த நலன்களைப் பாதுகாத்து முன்னேற்றும் பாங்கில் கொண்டுள்ள தேசிய உணர்வைக் குறிக்கும்.

இலங்கையிற் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில், அடிப்படையில் அவசியம் எனக் கருதப்பட்டது சுதந்திரத்தை அடைவதற்காக அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைக்க வல்ல குடியியற் தேசியவாதமே. குடியியற் தேசியவாதம் சுதந்திரத்திற்கு முன் ஏதோ ஓரளவில் நிலவியதிற் சந்தேகம் இல்லை. அதன் காரணமாகத்தான் நாம் ஒரு தேசம் என்ற அடிப்படையில் அதிர்ஷ்டவசமாகச் சுதந்திரத்தை அடையக்கூடியதாய் இருந்தது. ஆயினும் சுதந்திரத்திற்கு முன்னரும் கூட வேறு மனப்பாங்குகளும் காணப்பட்டிருந்தன.

இனத் தேசியவாதத்தைக் கட்டியெழுப்புதல் சுலபம்; குடியியற் தேசியவாதத்தைக் கட்டியெழுப்பதல் கடினம் என்பது உண்மை. மொழி ரீதியான, கலாசார ரீதியான தடைகள் காணப்படுகின்றன. குடியியற் தேசியவாதத்தைக் கட்டியெழுப்புவதற்கு தலைவர்களுக்கு ஒரு விசாலமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கு இருக்க வேண்டும். ஒரு கூட்டுத் தலைமைத்துவம் அவசியம். ஒரு சமூகத்தைச் சார்ந்த தலைவர் இன்னொரு சமூகத்தவரின் மதிப்பைப் பெறாதவராக இருக்கலாம். இதன் காரணமாகத்தான் கூட்டுத் தலைமைத்துவம் அவசியமாகிறது.

இலங்கையிற் சுதந்திர இயக்கம் ஆரம்பித்த போது, 1919 இல் இலங்கைத் தேசிய காங்கரஸ் உருவான நிலையில் உரு கூட்டுத் தலைமைத்துவத்தையும் குடியியற் தேசியவாதத்தையும் ஏற்படுத்தும் முயற்சி ஒன்று காணப்பட்டது. எனினும் விரைவில் சிங்கள மகா சபைகளும், தமிழ் மகா சபைகளும் தனித்தனியாக உருவாக்கப் பட்டன. ஆக்வே குடியியற் தேசியவாதம் ஐதாக்கப்பட்டது.

குறிப்பிட்டதொரு சமூகத்தைச் சார்ந்த தலைவர்கள் தம் சொந்த சமூகம் தொடர்பான பொறுப்புகள் தமக்கிருப்பதாக உணரக்கூடும் என்பதும் உண்மையாகலாம். ஆகவே அச்சமூகங்கள் சம்பந்தப்பட்ட சில நிறுவனங்களின் உருவாக்கம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதும் இயல்பானதொன்றும் ஆகும். ஆயினும் இது குடியியற் தேசியவாதத்தை அல்லது கூட்டுத் தலைமைத்துவத்தை அல்லது பொது ஸ்தாபனங்களைப் பாதிக்கக் கூடாது. இந்தியாவைப் போல் இலங்கையிலும் சுதந்திரத்திற்கு முன் அனைத்து சமூகங்களினதும் மதிப்பைப் பெறக்கூடிய கூட்டுத் தலைமைத்துவம் அல்லது தலைவர்கள் காணப்படாதது ஒரு பாரிய குறைபாடாக விளங்கியது.

**சுதந்திரத்திற்கு பின்**

இந்த நாட்டின் இனத்துவ உறவுகளைப் பாதித்த பாரிய தவறுகள் சுதந்திரத்திற்குப் பின்னரே இழைக்கப்பட்டன. ஆனால் இதற்கான மூலக் காரணிகள் இதற்கு முன்னரேயே காணப்பட்டன. உதாரணமாக 1936 இல் State Council (தேசிய ஆலோசனைச் சபை) முறையின் கீழ், சிறுபான்மையினரைத் திட்டமிட்டு அப்புறப் படுத்தும் நோக்குடன் சிங்கள அமைச்சரவை உருவாக்கப்பட்டது.

இனத்துவ உறவுகளிற் பாதிப்பை ஏற்படுத்திய பாரிய தவறுகளை சிங்களத் தலைவர்களும், சமூகமும் புரிந்தன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதொன்று. ஏனைய தலைவர்கள் அல்லது சமூகங்களுடன் ஒப்பிடும் போது சிங்களத் தலைவர்களும் சமூகமும் இயல்பாகவே தீங்கானவர்கள் என்பதல்ல இதன் கருத்து. சிறுபான்மைச் சமூகங்களை அப்புறப்படுத்தி கட்டுப்படுத்தி அல்லது அடக்கி செயற்படும் போக்கு பெரும்பான்மைச் சமூகத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பானதொன்றாகும். இது சட்ட, அரசியல், கல்வி நடவடிக்கைகள் ஊடாகத் திருத்தப்பட்டு மட்டுப்படுத்தப்பட வேண்டியதொன்றாகும். இந்நடவடிக்கைகள் ஊடாகவே பல்கலாசார சமூகம் ஒன்றில் பெரும்பான்மைச் சமூகத்திற்கும் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் இடையில் சரியான சமநிலை ஒன்றை உறுதிசெய்ய இயலும்.

சுதந்திரத்தை உடன் அடுத்த காலப் பகுதியில், சிறுபான்மையினரின் பிரதிநிதிகளையும் அமைச்சரவையில் உள்ளிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இம் முயற்சி கைவிடப்பட்டது அல்லது அசாத்தியமாகியது. அதன் பின்னர் சிறுபான்மைச் சமூகங்களிலிருந்து ஒன்று அல்லது இரு அமைச்சர்களை அமைச்சரவையில் உள் வாங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் கண் துடைப்பாகவே தென்பட்டன.

**துரவ நிலை.**

எமது நாட்டு அரசியற் கட்சி முறை இன சார்புடையதாக அமைந்தமை ஒரு பாரிய குறைபாடே. மாறி, மாறி ஆட்சிக்கு வந்த இரு பிரதான கட்சிகளும் உண்மையான தேசியக் கட்சிகளாக இருந்ததில்லை. அவை முதலிற் தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கையையும் பின் முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கையையும் இழந்தன. இந்த நாட்டிற் குடியியற் தேசிய வாதத்தை வளர்த்தெடுக்க அவை தவறியமையே இதற்கான பிரதான காரணம். பெரும்பான்மைச் சமூகத்தின் இனத்தேசியவாதம் தொடர்பாக அவை பக்கச்சார்புடையனவாக விளங்கின.

இது பிரதான இரு கட்சிகளின் தவறு மட்டுமல்ல. சிறிய கட்சிகளும் அற்ப புகழுக்காகவும் அரசியல் இலாபத்திற்காகவும் இனத் தேசியவாதத்திற்கு மக்கள் மத்தியில் தூபமிட்டுக் கொண்டிருந்தன. சிறுபான்மைச் சமூகங்களின் தலைவர்களிடமும் குடியியற் தேசியவாதம் பற்றிய நோக்கு எதுவும் இருக்க வில்லை. அவர்களது கொள்கையும் இனத் தேசிய வாதத்தை வளர்ப்பதாகவே அமைந்தது. சொந்த சமூகத்திற் பிரபல்யம் பெறுவதற்குரிய இலகுவான மார்க்கமாக அமைந்தது பெரும்பான்மையினரின் அல்லது சிறுபான்மையினரின் இனத் தேசியவாதத்தைத் தூண்டிவிடுவதாகும்.

மிகப் பாரதூரமாக அமைந்தவை சுதந்திரத்திற்கும் பின்னர் அரசாங்கங்களினால் நிறைவேற்றப்பட்ட கொள்கைகளும் சட்ட நடவடிக்கைகளுமே. 1949 இல் நிறைவேற்றப்பட்ட குடியியல் சம்பந்தமான புதிய சட்டங்களால் 800,000 மேற்பட்ட மலைநாட்டுத் தமிழர் இந்திய வம்சாவளியினர் என்ற காரணத்திற்காக பிரஜா உரிமையினை இழந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர்கள் இந் நாட்டிற் பல தசாப்தங்களாக வாழ்ந்து வருவதுடன், நாட்டின் பொருளாதாரத்திற்கும், பெருமளவிற் பங்காற்றியுள்ளனர். இறுதியாக அவர்கள் வாக்குரிமையையும் கூட இழந்தனர்.

மேற்குறிப்பிட் நடவடிக்கைகள் வெளிப்படையான பாரபட்சம் மட்டுமன்றி தேசிய உரிமை, பிரஜா உரிமை, வாக்குரிமை தொடர்பாக சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை மனித உரிமைக் கோட்பாடுகளுக்கும் எதிரானவை. மிக அண்மைய இந்திய வம்சாவளியைச் சார்ந்த சிலரை அவர்களின் நாட்டிற்கு திருப்பி அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் கருதியிருந்தால் பின்னர் செய்தது போன்று இந்திய அரசாங்கத்துடான பேச்சு வார்த்தை ஊடாகவே இது மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அது வரை இந்த நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் பாரபட்சமின்றி சம உரிமை வழங்கப் பட்டிருத்தல் வேண்டும்.

**ஒரு திருப்பு முனை.**

இந் நாட்டின் இன உறவுகளில் பிரஜாவுரிமைச் சட்டம் ஒரு திருப்புமுனை என்பது நாம் அனைவரும் அறிந்ததொன்று. சமஷ்டிக் கட்சி அல்லது தமிழ் அரசுக் கட்சி உருவாவதற்கு இது தூண்டுகோலாக அமைந்தது. மலைநாட்டுத் தமிழருக்கு நடந்தது அனைத்துத் தமிழருக்கும் விரைவில் நடக்கும் என அவர்கள் கருதினர். 1956 இல் தனிச் சிங்களத்தை உத்தியோக மொழியாக ஆக்குவதற்கு சிங்களத் தலைவர்கள் முனைந்தபோது தமிழரின் அச்சம் நியாயப் படுத்தப்பட்டது.

மொழிப் பிரச்சினை ஒரு முக்கிய மனித உரிமைப் பிரச்சினை ஆகும். இப்பிரச்சினை இன்னமும் நட்பு ரீதியிற் தீர்த்து வைக்கப்படவில்லை. அனைத்து இன சமூகங்களும் தம்தம் மொழியை நேசிக்கின்றன. மனித உரிமைகளில் இது ஒரு முக்கிய கலாசார உரிமையாகும்.

1956 இல் சிங்களத்தையும், தமிழையும் உத்தியோக மொழிகளாக்குவதில் எவ்வித சிரமமும் இருக்கவில்லை என்பது வெளிப்படை. அத்துடன் ஆங்கிலத்தை ஒரு இணைப்பு மொழியாக, சர்வதேச மொழியாக, உயர் கல்விக்கான மொழியாக அங்கீகரிப்பதன் மூலம் அதன் முக்கியத்துவத்தையும் பேணக் கூடிய நிலை இருந்தது. இதை அன்று செய்திருந்தால், தற்போது நிலவும் முரண்பாடு சுலபமாகத் தீர்க்கப்பட்டிருப்பதுடன், நாடும் பெருமளவில் வளர்ச்சி கண்டிருக்கும். சிங்கள இனத்தேசியவாதத்தின் முனைப்பு காரணமாக இது அன்று செய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்சைகள்

இக்காலகட்டத்தின் போது சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிற் சர்ச்சைகளாக வேறு விடயங்களும் காணப்பட்டன. அவற்றுள் ஒன்று குடியேற்றம் சம்பந்தமானதும், காணி ஒதுக்கீடு சம்பந்தமானதுமான கொள்கை. சுதந்திரத்தின் பின் பயிர்ச் செய்கைக்கான புதிய காணிகள் தேவைப்பட்டன. எனினும் மக்களுக்குக் காணிகள் ஒதுக்கப் பட்டபோது அக் காணிகளில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கி, சமமாகப் பகிரப்பட்டிருத்தல் வேண்டும்.

இதையொத்த மற்றொரு சர்ச்சை பல்கலைக்கழக அனுமதியிற் தரப்படுத்தல். பின்தங்கிய நிலையில் உள்ள சில பிரிவினரை முன்னேற்றுவதற்கு தரப்படுத்தல் பொதுவாக அவசியமாகிறது. கொள்கையளவில் இது சிறந்ததொன்றே. ஆனால் தரப்படுத்தல் வாய்பாடும், அது செயற்படுத்தப்பட்ட முறையும் மிக முக்கியமானவை. இளைஞர் தாம் பாரபட்சப்பட்டுள்ளதாக கடுமையாக உணர்ந்தனர். இக் குற்றச்சாட்டு சரியோ, தவறோ, அவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமே இது பற்றித் தீர்மானிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

இந்நாட்டில், தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிற் தமிழரோ முஸ்லிம்களோ அங்கம் வகியாதிருந்ததே இவ்வனைத்துச் சர்ச்சைகளுக்கும் பின்னணியாக இருந்த விடயமாகும். அவர்கள் அதிகாரத்தைப் பகிரவில்லை. நிருவாகத்தில் அவர்கள் பங்குதாரர்களாக இருக்கவில்லை.

### பங்காளியாக இருக்கும் நிலை.

ஒருவர் ஒரு கையால் கைதட்டி ஒலியெழுப்ப முடியாது என்பது வெளிப்படை. ஒலி யெழுப்புகற்கு இரு கைகளும் தேவை. பங்காளியாக இருக்கும் நிலையும் அதிகாரப் பகிர்வும் இருவழி செயன்முறைகள். பங்காளியாக இருப்பதற்கும், அதிகாரத்தைப் பகிர்வதற்கும் தீவிர விருப்பு அவசியம். சிறுபான்மையினரை எமது நாட்டைப் பொறுத்த வரையில் ஒதுக்குவதே பிரதான நோக்காகத் தென்பட்டது. ஆனால் அதேசமயம் சில சிறுபான்மையினத் தலைவர்கள் தம்மைத் தாமே அப்புறப்படுத்தும் மனப்பாங்கைக் கொண்டிருந்தனர். எதிர்ப்பதிலும், ஒத்துழையாதிருப்பதிலும் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

உண்மையில் அதிகாரப் பகிர்வையும் பங்காளியாக இருத்தலையும் தூண்டுவதற்கு உகந்த அமைப்பு முறைகள் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை ஆட்சி அரசும் அதனோடு இணைந்த பெரும்பான்மைவாதமும் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கொள்கைகள் பங்காளியளாக இருப்பதற்கோ அல்லது அதிகாரப் பகிர்வுக்கோ உகந்தவை அல்ல. அம் முறைமையின் கீழ், சிறுபான்மைச் சமூகங்களுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களில் மட்டும் அதிகாரம் எட்டும். ஆனால் அந் நிறுவனங்களுக்கு அதிக வலு இருக்கவில்லை. உள்ளூராட்சி நிறுவனங்களால் சிறுபான்மையினரின் முக்கிய பிரச்சனைகளை தீர்க்க முடியவில்லை.

சிறுபான்மைச் சமூகங்கள் சோல்பரி அரசியலமைப்புக் திட்டத்திற் சிறிது நம்பிக்கை வைத்திருந்தனர். காரணம் அதை உருவாக்குவதில் குறைந்த பட்சம் அவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

அந்த அரசியலமைப்புத் திட்டம் ஒரு ஒற்றை ஆட்சி அரசை பிரகடனப் படுத்தவில்லை. 1949 இலிருந்து தமிழ் மக்களின் கோரிக்கை பெரும்பாலும் ஒரு சமஷ்டி அமைப்பு முறையாகவே அமைந்தது. 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டம் இலங்கையை ஒரு ஒற்றை ஆட்சி அரசாகப் பிரகடனப்படுத்திய போது அது தமிழ் மக்களுக்கு முகத்தில் அறைந்தது போலாகியது. துரதிர்ஷ்டவசமாக 1972 ம் அல்லது 1978 ம் ஆண்டு வரைவுகளில் சிறுபான்மையினங்கள் முறையாகப் பங்கு பற்ற முடியவில்லை.

### சமூக, பொருளாதார சூழ்நிலைகள்.

இன முரண்பாட்டை அரசியற் காரணிகள் மட்டும் தான் தோற்றுவித்தன என்று கூறுவதற்கில்லை. பல சமூக, பொருளாதார காரணிகளும் பின்னணியில் இருந்துள்ளன.

சுதந்திரத்திற்கு முன் பிணக்குகன் காணப்பட்டுள்ளன. பிரதிநிதித்துவம், குடியேற்றத் திட்டக் கொள்கைகள், இந்திய குடிவரவு போன்றன தொடர்பான பிணக்குகள் காணப்பட்டிருந்தன. ஆனால் இப் பிணக்குகள் ஒரு நிரந்தர முரண்பாடு தோன்றுமளவிற்கு இருந்ததில்லை. சுதந்திரத்திற்குப் பின் சர்ச்சைகளும், மோதல்களும் தோன்றின. மோதல்கள் உத்தியோக மொழி, அரசியலமைப்பு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றியதாக ஏற்பட்டன. இம் மோதல்களின் போது தமிழ்மக்கள் உடல் ரீதியாகத் தாக்கப்பட்டு பல எண்ணிக்கையிற் கொல்லப்பட்டனர். ஆரம்பகாலச் சம்பவங்களுக்குரிய ஆண்டாக 1958 அமைந்தது. 1983 சம்பவங்களின் பின், முரண்பாடு ஒரு நீடித்த உள்நாட்டு யுத்தமாக வளர்ச்சியடைந்தது.

பிணக்குகள் எவ்வாறு மோதல்களாகவும், மோதல்கள் எவ்வாறு உள்நாட்டு யுத்தமாகவும் தோற்றம் பெற்றன? அரசியற் காரணிகள், இன சமூகங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட நலன்கள் என்பவற்றுக்கு அப்பால், சமூக பொருளாதாரக் காரணிகளும் சூழல்களும் இந் நிலைமையை மோசமாக்கியிருந்தன. அவற்றுள் சில வருமாறு:

இலங்கை வளர்ச்சி குன்றிய ஒரு நாடு. சுதந்திரத்தின் ஆரம்ப காலகட்டத்தில் அநேக பிற ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைப் பொருளாதாரம் அவ்வளவு தூரம் தாழ்வாக இருக்கவில்லை. எனினும் இந்நாடு முன் நோக்கி நகரமுடியவில்லை. மிக பின்தங்கிய நிலையில் காணப்பட்ட சில நாடுகள் விரைவில் இலங்கையைத் தாண்டின. மலேசியாவும், சிங்கப்பூரும் இதற்கு இரு உதாரணங்கள். எனினும் இலங்கை உயர்கல்வி மட்டத்தை நிலைநிறுத்திக் கொண்டது. ஆகவே மக்களின் எதிர்பார்க்கைகள் நடைமுறை வாழ்க்கையில் அவர்களின் இயல் அளவை மேவி நின்றன. இது அதிருப்திக்கும் விரக்திக்கும் இட்டுச் சென்றது. அவ்விரக்தி குறிப்பாக இளைஞர் மத்தியில் இன அல்லது சமூக மட்டங்களில் கலகத்திற்கான ஏதுவாக அமைந்தது.

இலங்கையின் அபிவிருத்தியும் சமன் அற்றதாகக் காணப்பட்டது. நகரப் பிரிவுக்கும் கிராமப் பிரிவுக்கும் இடையிற் பாரிய வேறுபாடுகள் காணப்பட்டன. அதிகளவில் அபிவிருத்தி குன்றிய கிராமியப் பிரிவுகளில், தமிழர்களும் முஸ்லிம்களும் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த வடக்கு கிழக்கு மாகாணங்களின் பெரும் பகுதிகள் உள்ளடங்கின. தென் மாகாணத்தின் சில பகுதிகள் போன்று, வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களின் அநேக பகுதிகளில் முறையான உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார வசதிகள் அருகிக் காணப்பட்டன.

இனமுரண்பாட்டின் பின்னனியில் இளைஞர் தலையீடு இருந்துள்ளமை தெளிவு. சுதந்திரத்தின் பின் இந்நாட்டிற் சனத்தொகை பெருமளவில் வளர்ச்சி பெற்றது. சனத்தொகை அதிகரிப்புக்கான பிரதான காரணங்களாக இறப்பு வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்திய மலேரியா கட்டுப்பாடு, சுகாதார சேவைகள் விஸ்தரிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**இளைஞர் பரிமாணம்.**

1947 இல், இளைஞர் பகுதியினர், அதாவது 15 இற்கும் 29 இற்கும் இடைப்பட்ட வயதினர் 25 வீதத்தினர் மட்டுமே. ஆனால் 1971 இல், இப்பகுதியினர் 30 வீதமாக உயர்ச்சி கண்டது. இந்த வீதம் 1981 வரை மாறாதிருந்ததுடன் சிங்கள, தமிழ் சமூகங்கள் இரண்டிலும் இளைஞர் தொகை மிக உயர்ந்தளவிற் காணப்பட்டது. அதிகரித்த இளைஞர் தொகையின் இரு பிரதான பண்புகளாக உயர்கல்வி நாட்டமும் உயர்மட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புகளும் அமைந்தன. பொருளாதாரம் தேக்கநிலை காரணமாக இளைஞர் வேலையின்மையும் உயர்ந்தளவிலேயே காணப்பட்டது.

1971 இல் சிங்கள இளைஞர் கலகத்தில் ஈடுபட்டுச் சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டனர். தமிழ் இளைஞர் புறக்கணிக்கப் பட்டதுடன், தாம் முற்றாகவும் திட்டமிடப்பட்டும் புறக்கணிக்கப்பட்டதாக அவர்கள் கருதினர். ஆகவே 1980 களில் அவர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். சிங்கள இளைஞர் கலகத்தில் ஈடுபட்டபோது அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட அதே சமயம், தமிழ் இளைஞர்களின் கலகத்தைப் பொறுத்தவரை அவர்களை முற்றாக நசுக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை இரு கலகங்களுக்கும் இடையிலான பெரிய வேறுபாடு.

இந் நிகழ் முறையின் போது அரசின் தன்மை வெளிப்படுத்தப்பட்டது. சமூக முரண்பாடுகள் தோன்றும் போது அரசாங்கம் பக்கச் சார்பின்றி இயங்க வேண்டும். ஆனால் அரசாங்கம் பெரும்பான்மைச் சமூகமான சிங்கள மக்கள் சார்பாகவே நடந்து கொண்டது. அரசாங்கத்தின் இப் போக்கை அனைவரும் கண்டிக்க வேண்டியதுடன் அதைத் திருத்துவதற்கும் முன் வரவேண்டும். இலங்கை அடிப்படையில் ஒரு சனநாயக நாடாக விளங்குவதால் இப் பிரச்சனையைத் தீர்ப்பது சாத்தியமே.

சிறுபான்மை சமூகங்களுக்கு நீதிவழங்கப்படுவது தொடர்பாக சர்வதேச சமூகம் எப்போதும் ஆர்வமாக இருப்பதனால் இந் நம்பிக்கை மேலும் வலுப்பெறுகிறது. அத்துடன் பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்த பல பிரிவினர் நிலைமையை ஒப்புக்கொள்ள முன் வந்ததுடன் பிரச்சினையை நட்பு ரீதியில் சமாதானமாகத் தீர்க்க விருப்புகின்றனர்.

எனினும் நீதிக்காகப் போராடி அரசமைப்பு முறையைச் சீர்திருத்தும் முயற்சிக்குப் பதிலாக, தமிழ் இளைஞரின் ஆதிக்கம் மிக்க அமைப்பானது அதியுச்ச வன்முறைகள் ஊடாகவும் போரின் மூலமும் ஒரு தனிநாட்டுக்கான தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இப்போராட்டம் சிறுபான்மை சமூகங்களின் நலன்கள் தொடர்பான எதிர்வினையாக அமைந்ததுடன் அனர்த்த பின்விளைவுகளுடன் வன்முறை நச்சுவட்டமாக உருவெடுத்துள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# இன மீளிணக்கப்பாட்டுக்கும் சமாதானத்திற்குமான சாத்தியப் பாடுகள்

இன மீளிணக்கத்திற்கான சாத்தியப் பாடுகள் இலகுவானவையாக இல்லாவிடினும் மந்தமானவை அல்ல. இன மீளிணக்கப்பாடின்றி நிலை நிற்கக் கூடிய சமாதானம் இல்லை. இன மீளிணக்கத்திற்கும் சமாதானத்திற்கும் இரு பிரதான நிபந்தனைகள் அவசியம். முதலில் தப்பெண்ணம், பக்கச் சார்பு இன்றி, பிரச்சினைகள் பற்றி இயன்றளவு சரியான விளக்கம் தேவை. இரண்டாவதாக நாமும் குறிப்பாக அரசியற் தலைவர்களும் சரியான கொள்கைகளைப் பின்பற்றி, அவற்றை நடைமுறைப் படுத்துவதற்குரிய மனோதிடம் மிக்கவர்களாக விளங்க வேண்டும்.

## இழந்த வாய்ப்புகள்:

கடந்த காலங்களில், பிரதான பிரச்சினைகளைத் தீர்க்கும் தறுவாயை இலங்கை பல தடவைகள் எட்டியபோதும், அரசியல் மனோதிடம் போதியளவு இல்லாதிருந்தமை காரணமாக வாய்ப்புகளை நழுவவிட்டது. நாம் இழந்த இரு பிரதான வாய்ப்புகளாவன:

1958 இல் கைச்சாத்திடப்பட்ட பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம்.

1966 இல் ஏற்படுத்தப்பட்ட டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம்.

எதிர்க்கட்சியின் எதிர்ப்புக் காரணமாக இரு சந்தப்பங்களிலும் வாய்ப்புகள் நழுவவிடப்பட்டன. ஒரு கட்சி பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டபோது மறு கட்சி அதை எதிர்த்துது. ஆனபடியால்தான் பிரச்சினையைத் தீர்ப்பதில் இரு கட்சிகளும் ஓர் உடன்பாட்டுக்கு இணங்க வேண்டியது அவசியமாயிற்று. உதாரணமாக, பண்டாரநாயக்கா - சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் 1958 இலும் 1966 இலும் பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும் என வாதிட முடியும்.

இரு பிரதான கட்சிகளுக்கும் இடையிலான இணக்கப்பாட்டுக்குத் தடையாக அமைந்தது ஆக்ரோஷமான அதிகார அரசியலே. ஆகவே இரு பிரதான கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு மக்களிடமிருந்தும் சிவில் சமூகதிடமிருந்தும் வலுவான தூண்டுதல் அல்லது அழுத்தம் அவசியமாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இது போதுமானது அல்ல என ஒருவா் வாதிடலாம். ஏனெனில் அரசியற் சமன்பாட்டில் ஜே. வி. பி யும் ஒரு பிரதான சக்தியாக விளங்குகிறது. 1987 - 89 இல் 13 வது திருத்த சட்ட மூலத்திற்கு எதிா்ப்புக் காட்டியது போல ஜே. வி. பி யினா் எந்தவொரு உடன்பாட்டுக்கும் பலமான எதிா்ப்பைக் காட்டலாம். பாராளுமன்றத்திலோ வெளியிலோ அவா்கட்கு இருக்கும் பலத்திற்கும் புறம்பாக, ஜே. வி. பி. யினரும் சிங்கள கிராமிய இளைஞா் என அவா்களாற் பிரதிநிதித்துவப் படுத்தப் படுபவா்களும் தீா்வு காண்பதிற் செல்வாக்குச் செலுத்துபவா்களாக விளங்குகின்றனா். அவா்களின் ஆதரவின்றி ஒரு தீா்வு நிலைநிறுத்தப்பட வல்லது அல்ல.

தற்போதைய நிலைமை மேலும் சிக்கல் அடைந்துள்ளது. தமிழா் தரப்பிலும் கூட மிதவாத தலைமைப் பீடம் கடும்போக்காளா் கைக்கு மாறியுள்ளதே இதற்குக் காரணம். 13 வது திருத்தச் சட்ட மூலத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாகத் திருப்தியானவை அல்ல என்பது உண்மை.

மறுபுறத்தில், 1987 இல் மாகாணசபை அமைப்பு முறைக்குட் செயற்பட தமிழ் விடுதலைப்புலிகள் இணங்கியிருந்திருப்பின் தற்தோதைய பிரச்சினை தீா்க்கப் பட்டிருக்கும். நடை முறையிலிருந்த ஜனநாயக அமைப்பு முறையினுள் அவா்கள் செயற்பட்டு அப்பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களுக்குரிய தன்னாட்சியை விரிவு படுத்தியிருக்க முடியும். இலங்கைக்குத் தேவையானதெல்லாம் நடைமுறை சாத்தியமுள்ள நெகிழ்ச்சி மிக்க தீா்வுகளே.

**ஒப்பிட்டு ரீதியில் முன்னேற்றம்.**

1983 இல் போா் ஆரம்பித்த பின், பேச்சு வாா்த்தை மூலம் சமாதானத் தீா்வைக் கொண்டு வருவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. துரதிா்ஷ்டவசமாக மாசி 2002 இல் இரு தரப்பினராலும் இணங்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் தவிர அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டன. இந்த உடன்பாட்டின் பலனாக, 'யுத்தம் இல்லாத, சமாதானம் இல்லாத' ஒரு சூழ்நிலைக்கு இலங்கை பிரவேசித்தது. பல யுத்தநிறுத்த மீறல்கள் பின்தொடா்ந்த இச்சூழ்நிலை முற்றாக திருப்தியானதொன்றாக அமையாத போதிலும் போா் அற்ற சூழல் நிச்சயமாக போா்ச் சூழலை விட சிறந்ததொன்றே. யுத்தநிறுத்த உடன்படிக்கையானது இன முரண்பாட்டுக்கான இணக்கமான தீா்வு ஒன்றுக்குரிய சாத்தியக் கூறையும் வெளிப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச செல்வாக்கு.**

தற்போதைய நிலைமையின் பிரதான பலம், பேச்சுவார்த்தைகள் ஊடாகவும், சமாதான நடவடிக்கைகள் மூலமாகவும் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு வழங்கப்பட்ட சர்வதேச நல்லெண்ணமும் ஆதரவும் ஆகும். சமாதான நிகழ்முறையில் அனுசரணையாளர் என்ற வகையில் நோர்வே நேரடியாக ஈடுபட்டுள்ளது. அனைத்து சமூகங்களுக்கும் நியாயமான அடிப்படையில் இயன்றளவு விரைவாக இனமுரண்பாடு தீர்க்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய இரு பெரும் நாடுகளும் மிக ஆர்வமாக உள்ளன.

ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்கள் தனித்தனியாக முற்றாகத் தீர்க்கப் படமுடியாத ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். மனித உரிமைகள், மனிதாபிமான சட்டம் என்பன தொடர்பாக இலங்கை சர்வதேச அளவு கோல்களை ஏற்றுக் கொண்டது. இன முரண்பாடு உச்சளவில் சர்வதேசமயப்படுத்தப்பட்ட ஒரு விவகாரம். பல இனமுரண்பாடுகளின் தன்மை அவற்றின் சர்வதேச தாக்கங்களைப் பொறுத்து இதை ஒத்ததாக இருக்கின்றது.

மனித உரிமைகள் அல்லது ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்கள் மீதான அனாவசிய சர்வதேச தலையீடு தொடர்பாக எவரொருவரும் விழிப்பாகவும் விமர்சன நோக்குடனும் இருக்க வேண்டியது நியாயமானதொன்றே. எனினும் ஒரு நாட்டின் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளில் அல்லது மனிதாபிமான விடயங்களில் சர்வதேச தலையீடு பற்றி எவரும் குழப்பம் அடையவோ கலக்கம் அடையவோ தேவையில்லை. எந்தவொரு அனாவசிய சர்வதேச குறுக்கீடும் அனாவசிய அரசியல் வார்த்தை வீச்சின்றி இராஜ தந்திரமாகத் தீர்க்கப்பட வேண்டும்.

எந்தவொரு நாடும் நீதியான அல்லது அநீதியான விடயங்கள் எனக் கருதப்படும் விடயங்கள் தவிர, பிற உள்நாட்டு முரண்பாடுகள் தொடர்பாக பக்கம் சார்ந்து செயற்படுவதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இருக்க முடியாது. தவறான விளக்கங்கள் அல்லது தவறான தகவல்கள் காணப்படலாம். அனைத்துக் கட்சிகளும் தமது நியாயத்தை சர்வதேச சமூகத்திற்கு, அது ஓர் அரசாங்க நிறுவனமாயிருப்பினும் சரி அல்லது சர்வதேச நிறுவனமாயினும் சரி எடுத்துக் கூறுவதற்கு சம உரிமைகள் உடையன. சர்வதேச சமூகத்துடன் தொடர்பு கொள்வதற்குரிய நாகரிகமான வழி அதுவே.

இலங்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஓர் அங்கத்துவ நாடு என்ற வகையில் அந்த ஸ்தாபனத்திடமிருந்தும் அதன் பிற அங்கத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிடமிருந்தும் உதவி கோருவதற்கும் தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குமான உரிமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டுள்ளது.

சுனாமி அநர்த்தத்தின் பின், சர்வதேசத்தின் கவனம் கணிசமானளவில் இலங்கை மீது திருப்பப்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் நிவாரணம், மற்றும் புனர்நிருமாணப் பணிகளுக்கான நியாயமானளவு உதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளதுடன், அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இவ் விடயத்தில் ஒத்துழைக்க வேண்டும் எனவும் எதிர் பார்க்கின்றது.

இந்த ஒத்துழைப்பை அனுகூலமான முறையில் மேலும் பயன்படுத்துவதன் மூலம் இன முரண்பாட்டைத் தீர்க்க முடியும் எனவும் நீடித்த அமைதியை உறுதி செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. சமாதான நடவடிக்கைகளுக்காக அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பும் வலுவாக நீடிக்கப்படவேண்டும். அரசாங்கத்திற்கும் எதிர்கட்சியினருக்கும் இடையிலான ஒத்துழைப்பும் இப் பணிக்கான சிறந்த சகுனம் ஆகும். ஆகவே தற்போதைய நிலை ஒரு சாதகமான சூழலே.

**அவசிய மனமாற்றம்.**

எவ்வாறாயினும், சர்வதேச ஒத்துழைப்பு அல்லது நோர்வே நாட்டு அனுசரனை மட்டும் நாட்டுக்குச் சமாதானத்தைப் பெற்றுத் தரமாட்டாது.

சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டியவாகள் இந் நாட்டு மக்களே. சமூகங்களுக்கு இடையில் மனமாற்றம் ஏற்பட்டு, சந்தேகம், அவநம்பிக்கை என்பவை மறைந்து நம்பிக்கை, ஒத்துழைப்பு ஆகியன ஏற்பட வேண்டும். மிக முக்கியமாக மக்களினதும் அரசியல்வாதிகளினதும் உள்ளத்தில் மாற்றம் ஏற்பட வேண்டியது மிக முக்கியமானதாகும்.

ஏற்கனவே நடந்து முடிந்த விடயங்களைக் கருத்திற் கொள்ளும் போது இது அத்தனை சிரமமானதல்ல. தெற்கில் வாழும் மக்கள் அதிகளவில் மாற்றமடைந்து உள்ளனர் என்பது ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மை. தெற்கில் வாழும் மக்கள் கடந்த காலங்களில் அந்நியர் மீது வெறுப்புணர்வும் அச்சவுணர்வும் கொண்டிருந்திருப்பின், தற்போதைய சந்ததியினர் பல்கலாசாரத்தையும், சிறுபான்மையினரின் உரிமைகளையும் பெருமளவில் ஏற்றுக்கொள்ள அல்லது இடமளிக்க முன்வந்துள்ளனர்.

வடக்கில் நிலையும் அதிகளவு மாறுதலடைந்துள்ளது. இம்மாற்றம் ஏற்பட்டிருக்காவிடின் யுத்த நிறுத்தம் சாத்தியப்பட்டிருக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பிலும் அதனோடு இணைந்த பிற கட்சிகள் தரப்பிலும் கூட தெற்கில் இயங்கும் கட்சிகளுடனும் சிங்கள சமூகத்தினருடனும் திறந்த பேச்சு வார்த்தை மேற்கொள்ளப் படவேண்டும் என்பதில் உடன்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் தனது கருத்துகளை சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக டெடுண்ண (வானவில்) என்றழைக்கப்படும் செய்தியேட்டைச் சிங்களத்திற் பிரசுரிக்கிறது. இவை யாவும் நல்லெண்ண சூழலுக்கான அறிகுறிகளே.

எங்ஙனமாயினும் பல பிற வலுவான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. இத் தேவைகள் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அவசியமான கொள்கை, மற்றும் அமைப்புசார் மாற்றங்கள் என்பவற்றின் அடிப்படையிலானவை. பல்வேறுபட்ட இன சமூகங்களின் முரண்பாட்டுக்குரிய நலன்கள் ஒற்றையாட்சி அமைப்பினுட் தீர்க்கப்பட முடியாதவை என்பது மிகத் தெளிவாகியுள்ளது.

13 வது திருத்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை வழங்கிய போதிலும், மத்திய அரசாங்கத்திற்கு அடுத்தபடியான அந்தஸ்து அச்சபைகளுக்குக் கொடுக்கப்பட்டமையால் மாகாணசபை முறை தமிழ் மக்களுக்கு ஏற்புடைத்தானதாக விளங்கவில்லை என்பது வெளிப்படை. குறைந்த பட்சம் ஒரு சமஷ்டி அமைப்பினுள் ஒரு தெளிவான தன்னாட்சி அந்தஸ்தே அவர்களது கோரிக்கையாகக் காணப்பட்டது.

**சமஷ்டி ஆட்சி**

சமஷ்டி ஆட்சி அமைப்பு சிங்கள மக்களின் நலன்களைப் பாதிக்கக் கூடியதொன்றல்ல. விசேட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய சமஷ்டியமைப்பு முஸ்லிம் சமூகத்தினருக்கும் ஏற்புடைத்தானதொன்றே. ஒரு சமஷ்டி அமைப்பினுள் தீர்வு ஒன்றைக் காணும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில், ஒரு பொதுவான புரிந்துணர்வு ஒஸ்லோவில் டிசம்பர் 2002 இல் எட்டப்பட்டிருந்தது. சிங்கள சமூகமோ, தமிழ் சமூகமோ அல்லது முஸ்லிம் சமூகமோ யாராயிருப்பினும் அவர்கள் பொதுவில் இவ்விடயத்தில் ஆதரவு தரவேண்டியது அவர்கள் கடமை.

சமஷ்டியாட்சி ஒரு சர்வரோக நிவாரணி அல்ல. எனினும், இது இலங்கை போன்ற பல்கலாசார சமூகம் ஒன்றுக்குப் பொருத்தமான பரிசோதிக்கப் பட்டதொரு அரசமைப்புத் திட்ட முறையாகும். பிற பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய சமஷ்டியமைப்பு பிரிவினைக்கான ஒரு மாற்றுவழி ஆகும். ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டியமைப்பு மக்கள் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண வழிவகுக்கும். இன நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற்குமான மார்க்கமாக இது அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

இந் நாட்டின் இன உறவுகள் தொடர்பான பிரதான பிரச்சினைகள் சிலவற்றைக் கல்வி நோக்கங்களுக்காக ஆராய்வதே இச்சிற்றேட்டின் பிரதான நோக்கம். இன முரண்பாடு சம்பந்தமான வரலாற்றையும் சமூக கீழ் அமைவையும் விமர்சன நோக்கில் ஆராய இந் நூல் முனைகிறது. எனினும் இதன் நோக்கம் கல்விசார் செயற்பாட்டின் அடிப்படையானது அல்ல. இங்கு எவ்வித குறிப்பிட்ட கோட்பாடும் முன்வைக்கப் பட்டதோ மறுக்கப்பட்டதோ இல்லை.

இந்த விமர்சன ஆய்வின் நோக்கம் முரண்பாட்டின் பலனற்ற தன்மையை எமக்கு ஞாபகப் படுத்துவதே. ஆகவே பிரதான செய்தி முரண்பாட்டையும் யுத்தத்தையும் நிராகரித்து சமாதானத்தை ஏற்படுத்துவது பற்றியதே. அச் செய்திக்கு இணங்கும் வகையில், பெரும்பாலான குறிப்புகளும் கூற்றுகளும் ஒரு நியமவடிவத்தை எடுத்துள்ளன.

முடிவுரையாகக் கூறக்கூடியது:

1. சிங்கள மக்கள் தலைமைத்துவ மனோபாவ வேட்கையிலிருந்து விடுபட்டும் (தாமே எப்போதும் உச்ச பதவி நிலைகளை வகிக்க வேண்டும் என்ற மனோபாவம்)

2. தமிழ் மக்கள் (முஸ்லிம் மக்களும் கூட) புறம்பான அரசியற் பாதையிலிருந்து விடுபட்டும், தாம் பகைவரால் சூழப்பட்டுள்ளதான மனப்பான்மையிலிருந்து விடுபட்டும் செயற்படுவார்களாயின், இந் நாட்டில் சமாதானம் வெகு தொலைவில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.